09.01.2025 - வியாழக்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

விலை ரூபா 40

ஆண்டு: 01 இதழ் : 66 குரோதி வருடம் மார்கழி மாதம் 25 ஆம் திகதி - ஹிஜ்ரி 1446 ரஜப் 09 பக்கங்கள் - 12




## உயிரிழந்து கரையொதுங்கிய டொல்பின்கள்



மன்னார்–புத்தளம் எல்லையில் உள்ள வில்பத்து தேசிய பூங்கா கடல் எல்லைக்குட்பட்ட “கொல்லன்கனத்த” பகுதியில் 11 டொல்பின்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன. இவைகள் வன அதிகாரிகளால் மீட்கப்பட்டு மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்பு நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

**படம் - மன்னார் நிருபர் எஸ்.ஆர். லெம்பேட்**

# ‘மொசாட்’ இலங்கைக்கு வருவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## முஜிபுர் ரஹ்மான் எச்சரிக்கை



இலங்கையில் உள்ள இஸ்ரேல் நாட்டவரின் மதஸ்தலங்கள் மற்றும் கலாசார ஸ்தலங்களுக்கு பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்படுவது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாகும். மொசாட் இலங்கைக்கு வருவது அவ்வளவு நல்லதல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் எழுப்பிய கேள்வியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தமது கேள்வியில், “ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், சபை முதல்வர் என அனைவரும் கடந்த காலத்தில் நிபந்தனைகளின்றி பலஸ்தீன விடுதலைக்காக

02 →

## இஸ்ரேலியர்களின் வருகைக்கு தடைகள் விதிக்க முடியாது

### சபையில் பிரதமர் ஹரிணி




இலங்கையில் யூத மதஸ்தலங்களை அமைக்க அனுமதி வழங்கப்படவில்லை.என்றாலும், இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அத்துடன், இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு தடைகள் விதிக்க முடியாது என்றும் கட்டுப்பாடுகளை விதிக்க ஆரம்பித்தால் சர்வதேச ரீதியில் வேறு பிரச்சினைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க நேரிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

02 →

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

## மாத்தளை: 20 அடி பள்ளத்தில் விழுந்து ஆட்டோ விபத்து கணவன், மனைவி பலி



**மாத்தளை எம். சதுர்தீன், ஏ.எம். ஜலீல்**

மாத்தளை மஹவல பொலிஸ் பிரிவில் நாரங்கம பகுதியில் நேற்று முன்தினம்(7) இரவு முச்சக்கர வண்டி ஒன்று பாதையை விட்டு விலகி 20 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் உயிரிழந்தனர்.

இவ்விபத்தில் மேலும் இருவர் காயம் அடைந்துள்ளனர். இதில் காயமடைந்த சிறுமி மற்றும் ஓட்டுநர் ஆகியோர் மாத்தளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு

02 →

## வளர்ச்சியை இலக்காக கொண்டதே ‘லைக்கா’ நிறுவனத்தின் மறுசீரமைப்பு




சவால் மிக்க உலக வர்த்தக சந்தையில் வளர்ச்சியடையும் நோக்கில் லைக்கா (Lyca) குழுமம் அதன் சில வணிக அலகுகளை மறுசீரமைக்கும் பல செயற்திட்டங்களை வெளியிட்டுள்ளது. செலவுகளைக் குறைத்து வளர்ச்சியை நோக்கிச் செல்வது பிரதான இலக்கு என லைக்கா குழுமம் தெரிவித்துள்ளது.

உலகெங்கிலும் கையடக்கத் தொலைபேசிகளுக்கான வலைப் பின்னல்களையும் (Mobile Virtual Network Operator - MVNO) உகண்டாவில் ஒரு இயங்கு தளத்தையும் (operator)

02 →

## மட்டக்களப்பில் லசந்தவின் நினைவு தினம் அனுஷ்டிப்பு



ஆரையம்பதி நிருபர்

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் 16 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று 8 ஆம் திகதி புதன்கிழமை காலை மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அனுஷ்டிக்கப்பட்டது. நினைவுத் தூபியில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் ஏற்பாட்டில் இவ் நினைவேந்தல அனுஷ்டிக்கப்பட்டது.

## வடக்கு புகையிரத சேவை அதிகரிக்கப்படல் வேண்டும்

### கஜேந்திரகுமார் எம்.பி. போக்குவரத்து அமைச்சரிடம் வலியுறுத்து



**(ரகுபரன்)**

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான புகையிரத சேவைகளின் பற்றாக்குறை தொடர்பாகவும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகள் சிரமங்கள் தொடர்பாகவும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய பின்னர் ,எழுத்து மூலமான கடிதத்தை போக்குவரத்து அமைச்சரிடம் நேரடியாக கையளித்தார்.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடக்கு புகையிரத மார்க்கத்திற்கான புரைமைப்பு நடவடிக்கைகளுக்காக 2023 மே 5ஆம் திகதி கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான புகையிரத சேவை நிறுத்தப்பட்டது. இந்நிலையில் நோக்கி இடம்பெற்ற 4 புகையிரத சேவைகளில்

02 →

## நான் பொய்யுரைக்கவில்லை; உண்மையை நிரூபிப்பேன்



**(கனூஷியா புஷ்பகுமார்)**

நாட்டு மக்களுக்கு தான் ஒருபோதும் பொய்யுரைக்க வில்லை எனவும் எதிர்வரும் நாட்களில் மக்களுக்கு உண்மைய நிரூபிப்பதாகவும் முன்னாள் சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தெரிவித்தார்.

“ஒருவன்“ செய்திப்பிரிவின் சகோதர ஊடகமான “மொனரா“ டிஜிட்டல் தளத்திற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

02 →

## லசந்த விக்கிரமதுங்கவின் 16 நினைவு தினம்; இன்று வரை நிலைநாட்டப்படாத நீதி



**(கனூஷியா புஷ்பகுமார்)**

மக்களுக்காக ஊடகவியலில் ஈடுபட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 16 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரான லசந்த விக்ரமதுங்க, பல ஊழல் மோசடி சம்பவங்களை மக்களுக்கு வெளிப்படுத்தினார். அவர் தனது உயிரை இரண்டாம்பட்சமாகவே கருதினார்.

யாராலும் நெருங்கக்கூட முடியாத பல விடயங் களை ஆராய்ந்து மக்களுக்கு

02 →

**ஆசிரியர் சேவை:**

## நிபந்தனையுடன் பதவி உயர்வு கல்வி அமைச்சு தீர்மானம் !

**(முகம்மட் முக்தார்)**

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

நாடளாவிய ரீதியிலுள்ள இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான பதவி உயர்வினை நிபந்தனை அடிப்படையில் வழங்குவதற்கு அரச சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அமால் எதிரிசூரிய தெரிவித்தார். இவ்வருடம் ஜூன் மாதம் 30ம் திகதிக்கு

02 →

## வெருகல் பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம்



(கிண்ணியா கியாஸ் ஷாபி, கீதபொன்கலன், அப்துல் சலாம் யாஸீன்)

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை, மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் திங்கட்கிழமை (06) மாலை தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்டுள்ள பதாகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தொல்லியல் திணைக்களத்தின் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு

02 →

## அரிசி தட்டுப்பாட்டுக்கு ரணில் அரசே காரணம்



**(சுப்ரமணியம் நிஷாந்தன்)**

சிவப்பு அரிசியை உண்ணாத மக்களுக்கு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 20 கிலோ வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டமையே நாட்டில் சிவப்பு அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை பிரதமரிடத்திலான கேள்வி நேரத்தில்

02 →

# முன்னாள் சபாநாயகர் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும் வரை காத்திருக்கும் அரசாங்கம்

(கனூஷியா புஷ்பகுமார்)

முன்னாள் சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தனது கல்வி சான்றிதழ்களை சமர்ப்பிக்கும் வரையில் அரசாங்கம் காத்திருப்பதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"சபாநாயகரின் கல்வித் தகைமைகள் தொடர்பில் அவருடைய பதிலுக்காக காத்திருக்கின்றோம்.

அவருக்கு தேவையான கால அவகாசத்தை வழங்க தீர்மானித்துள்ளோம். தேவையான சான்றிதழ்களை அவர் விரைவில் சமரப்பிப்பார்." எனத் தெரிவித்தார்.

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் "கலாநிதி" பட்டம் தொடர்பில் விமர்சனங்கள் எழுப்பப்பட்ட நிலையில் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி தனது பதவியை அவர் இராஜினாமா செய்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### மாத்தளை: 20 அடி

சிகிச்சை பெற்று வருகின்றனர்.இவ்விபத்து பல்லேபோல நாரங்கம பகுதியில் நேற்று முன்தினம்(7) இரவு 10:30 மணி அளவில் ஏற்பட்டுள்ளது. இவ்விபத்தில் உக்குவல மாபெரி பகுதியைச் சேர்ந்த எம். ஐ. ரிசாட் (வயது 75 கணவன்) ஹைனுல் ரசிமா (வயது 65 மனைவி) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மரண வீடு ஒன்றுக்கு சென்று விட்டு மீண்டும் முச்சக்கர வண்டியில் தனது வீடு நோக்கி திரும்பி கொண்டிருந்தபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்தது.

இவ்விபத்து சம்பவம் தொடர்பாக மஹவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### வளர்ச்சியை இலக்காக

லைக்கா குழுமம் ஏலவே ஸ்தாபித்திருக்கிறது.

டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரித்து உள்ளகச் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதுடன் பல்வேறு செயல்முறைகளை தானியங்குபடுத்தவும் லைக்கா குழுமம் விரும்புகிறது.

தொலைத்தொடர்பு துறையில் தீவிரமடைந்து வரும் போட்டி மற்றும் அதிகரித்து வரும் செலவுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில், விரிவான மதிப்பாய்வைத் தொடர்ந்து இந்த நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக லைக்கா குழுமம் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் ஊடாக சந்தை விரிவாக்க நடவடிக்கையில் சில முதலீடுகளை மேற்கொள்ள லைக்கா குழுமம் விரும்புகிறது.

மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் பிராந்தியங்கள் மற்றும் மையங்களுடனான செயல்பாடுகளை ஆதரிக்க உலகளாவிய வணிக சேவை மையங்களைப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது. அத்துடன் நாடு சார்ந்த நடவடிக்கைகளில் கணிசமான செயற் திறன்களைக் கொண்டுள்ளதாகவும் லைக்கா குழுமம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் புதிய சேவைகளுக்கான சந்தையின் வேகத்தை அதிகரிக்கவும் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும் லைக்கா குழுமம் எதிர்பார்கிறது.

கையடக்கத் தொலைபேசிகளுக்கான வலைப் பின்னல் செயல்பாடுகளை மேம்படுத்துவதிலும், ஆபிரிக்காவில் புதிய தொலைத் தொடர்பு வலைப் பின்னல் வாய்ப்புகளில் முதலீடு செய்வதிலும் கவனம் அதிகரித்துள்ளதாக கூறியுள்ள லைக்கா குழுமம், அமெரிக்கா மற்றும் ஸ்பெயின் நாடுகளில் புதிய தரமான டிஜிட்டல் வகைகளை அறிமுகப்படுத்துவதுடன், இந்த ஆண்டு வேறு புதிய நாடுகளில் விரிவாக்கத்தை விரைவில் அறிவிக்கவும் திட்டமிட்டுள்ளது.

"மூலோபாய மறுசீரமைப்பு ஒரு துணிச்சலான முன்னோக்கு" என லைக்கா குழுமத்தின் உப தலைவர் பிரேமானந்தன் சிவசாமி தெரிவித்தார்.

"இந்த முன்னுதாரணமான மாற்றம் எங்களின் செயல்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், வேகமாக மாறிவரும் தொழில்துறைக்கு ஏற்ப எங்களின் திறனை பலப்படுத்துகிறது. உலகளவில் எங்கள் வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கிறது." என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வளர்ச்சியை மையமாகக் கொண்ட இந்த மாற்றங்களால் பாதிக்கப்பட்ட ஊழியர்களுடன் தற்போது ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் லைக்கா குழுமம் தெரிவித்துள்ளது.

### வடக்கு புகையிரத

இடம்பெற்ற 4 புகையிரத சேவைகளில் இரண்டு சேவைகள் கிழக்கு மாகாணத்திற்கு இணைக்கபட்டுள்ளதாக அறிய முடிந்தது.

வடக்கு புகையிரத வீதி திருத்தப்பணிகள் நிறைவடைந்த பின்னர் புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்பட்டபோதும், இரண்டு புகையிரத சேவைகள் மட்டுமே மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மீளவும் ஆரம்பிக்கப்பட்டு இடம்பெற்று வந்த இரண்டு சேவைகளில் கடுகதி சேவை மீண்டும் இடைநிறுத்தபட்டுள்ளது.

தற்பொழுது யாழ் தேவி சேவை மாத்திரமே நாளாந்தம் இடம்பெறுகின்றது. கொழும்பு நோக்கி 11.00 மணிக்கும் யாழ்ப்பாணம் நோக்கி 5.45 மணிக்கும் இந்த சேவைகள் அட்டவணையிடப்பட்டுள்ளன. மேலும் திங்கள்,வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாத்திரம் குளிரூட்டப்பட்ட கடுகதி சேவை இடம்பெறுகின்றது.

உத்தரதேவி, யாழ் தேவி, கடுகதி, யாழ் நிலா, தபால் சேவை என ஐந்து சேவைகள் இடம்பெற்று வந்த நிலையில் இன்று இந்த சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் வரையான சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் கொழும்பிற்கும் அனுராதபுரத்திற்கும் இடையில் தினமும் குறைந்தது 4 சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் வடக்கு திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

புகையிரததிணைக்களம்வெளியிட்டதகவலின்பிரகாரம்திருத்தப்பணிகள் நிறைவடைந்துள்ள 10 புகையிரதங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த புகையிரத இயந்திரங்களுள் 2 இயந்திரங்களை வடக்கு புகையிரத சேவைக்கு வழங்கப்படுமெனத் தாங்கள் தெரிவித்துள்ளீர்கள்.

இரண்டுடன் மட்டுப்படுத்தாது கூடுதல் இயந்திரங்களை ஈடுபடுத்தி வடக்குக்கான புகையிரத சேவையை முழுமையாக சீர்செய்து மீளவும் ஆரம்பிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

### நிபந்தனையுடன்

முன் இலங்கை ஆசிரியர் சேவை 2-11,2-1,1ம் தரங்களுக்கு தகுதியடையும் ஆசிரியர்களுக்கு இவ்வாறு நிபந்தனையுடன் கூடிய பதவி உயர்வுகள் வழங்கப்படும் பதவி உயர்வுக்கு தேவையான மொடியூல்களினடிப்படையில் வினைத்திறமை காண் தடைப்பரீட்சைகளை ஒரு வருட காலத்திற்குள் சித்தியடைய வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுவதுடன் ஒருவருட காலப்பகுதிக்குள் சித்தியடையாவிடின் வழங்கப்பட்ட பதவி உயர்வு வாபஸ் பெறப்படும் எனும் நிபந்தனை விதிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கை வலயக்கல்வி அலுவலகங்களுக்கு ஒரு வார காலத்திற்குள் கல்வியமைச்சினால் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பதவி உயர்வுகள் ஆசிரியர்களுக்கு உரிய காலத்திற்குள் வழங்கப்படாமையால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இறுதியாக 2022 ஒக்டோபர் மாதம் வரை பதவி உயர்வுக்காக சலுகைக்காலம் வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை ஆசிரியர் சேவையில் பதவி உயர்வு பெறுவதற்கு ஆசிரியர் மத்திய நிலையங்களில் நடாத்தப்பட்டு வரும் மொடியூல் அடிப்படையிலான வினைத்திறமைகாண் தடை வகுப்புக்களில் கலந்து கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### வெருகல் பிரதேச

தெரிவித்து வெருகல் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்று புதன்கிழமை (08) காலை மக்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் வெருகல் பிரதேச செயலாளரிடம் மக்கள் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

"1 KM வட்டவான் தொல்லியல் நிலையம்" என குறிப்பிட்டு குறித்த பதாகை நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் இது பெரும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் எவ்வளவு பகுதி தொல்லியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது? அதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா? எதிர்காலத்தில் அப்பகுதியில் புத்த விகாரை வருமா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளதாக தெரிவித்தனர்.

கடந்த 28.12.2024 அன்று இரவோடு இரவாக குச்சவெளி பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் பதாகை நடப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 01ஆம் திகதியன்று மக்கள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

### அரிசி தட்டுப்பாட்டுக்கு

நாமல் ராஜபக்ச எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் சந்தர்ப்பத்தை அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய வழங்கியிருந்தார். இதன்போது அவர் இவ்வாறு கூறியதுடன், மேலும் தெரிவித்தாவது,

"அரிசி சந்தையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை போக்கும் வகையில் அரசாங்கம் இரண்டு கட்டங்களாக நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முதல்கட்டமாக டிசம்பர் 21ஆம் திகதிவரை அரிசி இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தியிருந்தோம். இரண்டாம் கட்டமாக குறித்த கட்டுப்பாடுகளை ஜனவரி 10ஆம் திகதிவரை தளர்த்தியுள்ளோம்.

கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளமையால் சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு நீங்கி வருகிறது. ஜனவரி 10ஆம் திகதிக்குள் மேலும் 40ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கிறோம். தற்போது சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை. அவசியமான அரிசியாக உள்ள சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 20 கிலோ வீதம் மக்களுக்கு சிவப்பு அரிசியை பகிர்ந்தளித்தனர். சிவப்பு அரிசியை உண்ணாதவர்களுக்கு கூட அதனை பகிர்ந்தளித்திருந்தனர். அதனால்தான் சிவப்பு அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அந்தப் பிரச்சினையின் காரணமாகவே ஏனைய அரிசிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

சதொச, நெற் கொள்வனவு திணைக்களம், கூட்டுறவு சங்கங்கள் ஊடாக நெல்லை கொள்வனவு செய்வதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பெரும்போகத்தின் பின்னர் அரிசிக்கான தட்டுப்பாடு முழுமையாக நீங்கும்.

ஒன்றரை மாதத்துக்குத் தேவையான நெல்லை கொள்வனவு செய்து அரிசி சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதனை நீக்கும் வகையில் அரிசிகள் விடுவிக்கப்படும். நுகர்வோருக்கும் பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் அரசாங்கம் எதிர்காலத்தில் செயல்படும்." என்றார்.

### நான் பொய்யுரைக்கவில்லை;

அதனை மேலும் விளக்கிய அவர்,

"எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை சவாலுக்கு உட்படுத்தும் விதத்திலான ஒரு நிலை உருவானது. அதன்காரணமாக, அதற்கு மேலும் நான் அந்த பொறுப்பில் தங்கியிருப்பது என்பது நல்லதல்ல. நான் பதவியிலிருந்து விலகி என் மீது எழுப்பப்பட்ட அவதூறுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய ஒரு தேவை எனக்கு இருந்தது.

ஆகவே, கட்சியுடன் கலந்தாலோசித்து அந்த சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டேன்." எனத் தெரிவித்தார். பதவிகளை பற்றிக் கொண்டு இருக்காமல், அத்தகைய அபாயகரமான ஒரு சூழலில் அவ்வாறான ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களிக்கும் போது புதியவர்களுக்கு நாட்டை ஒப்படைப்பதால் மீள நெருக்கடியான நிலை உருவாகுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் காணப்பட்டதாகவும், அந்த அச்சம் தற்போது நீக்கியுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட அசோக சபுமல் ரன்வலவின் "கலாநிதி" பட்டம் தொடர்பில் எழுந்த சிக்கல் நிலையையடுத்து, தனது கல்வித் தகைமையை நிஷரூபிக்க முடியாத காரணத்தினால் அவர் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

ஜப்பானின் வசேதா பல்கலைகழகத்தில் இருந்து தனது கல்வித் தகைமையை பெற்றுக் கொள்ள சிறிது கால அவகாசம் தேவை எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும், முன்னாள் சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல இதுவரையில் தனது கல்வித்தகைமைகளை நிஷரூபிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### லசந்த விக்கிரமதுங்கவின்

வெளிப்படுத்திய அந்த சிறந்த புலனாய்வு ஊடகவியலாளரான அவர் இல்லையேல் இன்று வரையில் பல தகவல்கள் யாரும் அறியாமலேயே போயிருக்கும். இவ்வாறான விடயங்களினாலேயே அவருடைய வாழ்க்கைக்கும், உயிருக்கும் பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டன.

இறுதியாக 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி காலை 10.25க்கு லசந்த விக்கிரமதுங்கவின் உயிர் பறிக்கப்பட்டது. வழமை போன்று பணிக்கு சென்று கொண்டிருந்த லசந்த விக்கிரமதுங்க அத்திடிய வீதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சிரேஷ்ட ஊடகவியலாளரை கொலை செய்தவர்கள் சுதந்திரமாக சுற்றித் திரியும் வேளையில், அவருடைய மரணத்தால் கடந்த காலங்களில் ஆட்சி மாற்றங்கள் கூட ஏற்பட்டன. ஆட்சிக்கு வந்தவர்கள் அவருடைய கொலை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்படி, 2016ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ஆம் திகதி லசந்தவின் உடல் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு , சில சந்தேகநபர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட போதும் விசாரணைகள் முடிவடையாமல் நின்றன. இன்று வரையில் அவருக்கான நீதி நிலைநாட்டப்படவில்லை.

பல சர்வதேச விருதுகளை பெற்றுள்ள லசந்தவுக்கு, ஐ.பி.ஐ. உலக பத்திரிகை, சுதந்திர நாயகன் விருது வழங்கி கௌரவித்தது.

லசந்தவின் கொலை, எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் 12 பாடசாலை மாணவர்கள் கடத்தி செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாக தேர்தல் மேடைகளில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### 'மொசாட்' இலங்கைக்கு

குரல்கொடுத்துள்ளனர். கடந்த காலத்தில் அமையப்பெற்ற அரசாங்கங்கள் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக குரல்கொடுப்பதற்கு பதிலாக இஸ்ரேலுடன் உறவுகளை பேணிவந்தன. இதனால் மத்திய கிழக்கு நாடுகளுடனான உறவில் எமக்கு பின்னடைவுகளும் ஏற்பட்டன. பலஸ்தீனம் தொடர்பில் சர்வதேச ரீதியாக எமக்கு இருந்த கௌரவத்துக்கும் கடந்த அரசாங்கங்கள் பாதிப்பை ஏற்படுத்தின.

இலங்கையின் பல பிரதேசங்களில் இஸ்ரேலியர்களின் மதஸ்தலங்கள் மற்றும் கலாசார மத்தியஸ்தலங்களை அமைத்து வருகின்றனர். இவற்றுக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதுடன், அவை கட்டப்பட்டும் வருகின்றன. மாத்தறை வெலிகம பகுதியில் இவ்வாறான கட்டிடமொன்று கட்டப்பட்டுள்ளது. தெஹிவளை அல்விஸ் பகுதியிலும் இவ்வாறான கட்டிடமொன்று கட்டப்படுகிறது. கொழும்பு 07, சிற்றம்பலம் ஏ கார்டினர் வீதியிலும் பாரிய கட்டிடமொன்று கட்டப்படுகிறது.

இந்த கட்டிடங்கள் கட்டப்படும் இடங்களுக்கு 24 மணித்தியாலமும் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பின் கீழ் அமைக்கப்படும் கட்டிடங்கள் என்ன என்பது தொடர்பிலேயே எமக்கு பிரச்சினை உள்ளது.

இலங்கையில் யூதர்கள் இருந்தால் அவர்களுக்கு மதஸ்தலங்களை அமைக்க அனுமதிக்கலாம். ஆனால், அவ்வாறு எவரும் இல்லாத சூழலிலேயே இந்த கட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன.

தெஹிவளை அல்விஸ் பகுதியில் குறித்த கட்டிடம் கட்டப்படும் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கொண்டுசென்று தெஹிவளை பொலிஸார் விசாரணை செய்துள்ளனர். நீதிமன்றத்தின் ஊடாகதான் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பலஸ்தீனத்துக்காக நாம் அனைவரும் வீதியில் இறங்கி போராடிய வரலாறு உள்ளது. இந்த கட்டிடங்களை தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக நாம் கருதுகிறோம். "மொசாட்" இலங்கைக்கு வருவது அவ்வளவு நல்லதல்ல. வெலிகடையில் குறித்த கட்டிடம் முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிலேயே அமைக்கப்பட்டுள்ளது. விரைவாக இதுதொடர்பில் அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

இஸ்ரேல் இராணுவ வீரர்கள் பலர் எமது நாட்டுக்கு வருகின்றனர். ஆனால், அவர்கள் இராணுவ வீரர்களா என்பதை அடையாளம் காண்பது கடினம். மனரீதியான நிம்மதியை தேடி அவர்கள் இங்கு வருகின்றனர். ஆனால், பல நாடுகள் இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகள் வருகையை நிறுத்தியுள்ளன. மாலைதீவு, லத்தீன் அமெரிக்க நாடுகள், தென் ஆபிரிக்க நாடுகள் என பல நாடுகள் நிறுத்தியுள்ளன. இஸ்ரேல் சுற்றுலாப் பயணிகளால் ஐரோப்பிய பயணிகள் வருவதில்லை என்பதாலேயே நிறுத்தியுள்ளன. எதிர்காலத்தில் இஸ்ரேல் இராணுவ வீரர்கள் வருகை தடுப்பது தொடர்பில் அரசாங்கம் என்ன எடுக்கும் நடவடிக்கை ." என்றார்.

### இஸ்ரேலியர்களின்

நாடாளுமன்றத்தில் நேற்று (08)புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி எம்.பி, முஜிபுர் ரஹமான் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பதிலளிக்கையில்,

"யூத மதஸ்தலங்கள் அனுமதியின் கீழ் செயல்படும் மதஸ்தலங்கள் அல்ல. இவை தொடர்பிலான தீர்மானங்கள் மிகவும் விரைவாக எடுக்கப்படும். எமது நாட்டில் உள்ள சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. இன ரீதியாக அவர்களை பிரிக்க முடியாது.

நாட்டில் ஒரு சுற்றுலாப் பயணிக்கு பிரச்சினை ஏற்பட்டாலும் அதன் ஊடாக சர்வதேச ரீதியில் மேலும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். அதனால் நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் பாதுகாப்பை வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது.

இந்த மத்திய நிலையங்கள் எவ்வித அனுமதியுடனும் செயல்படுபவை அல்ல. இது தொடர்பிலான தலையீட்டை நாம் விரைவாக மேற்கொள்வோம். அறுகம்பே தொடர்பான புலனாய்வு தகவலுடன், பாதுகாப்பை வழங்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டுள்ளது. அது எமது நாட்டுக்குவரும் சுற்றுலாப் பயணிகளுக்கான பாதுகாப்பு மாத்திரமே. எவருக்கும் அநாவசியமான விடயங்களை செய்வதற்கான பாதுகாப்பு அல்ல.

சர்வதேச கொள்கைகளை பின்பற்றும் நாடு என்ற அடிப்படையில் சர்வதேச சட்டங்களுக்கும் நாம் அனைவரும் உடன்பட வேண்டும். ஒரு இனத்தை மாத்திரம் நாம் இதில் அணுகினால் யாரை அனுமதிப்பது என்ற பிரச்சினை எழும். சுற்றுலாத்துறை எமது நாட்டின் பாரிய வருமானம் ஈட்டும் துறையாகும். அதனால் எந்தவொரு நாட்டின் சுற்றுலாப் பயணிகளுக்கும் அனுமதியை மறுக்க முடியாது. எதிர்காலத்தில் இதுதொடர்பில் நாம் கவனம் செலுத்துவோம். வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகள் இராணுவ வீரர்களா என்பது தொடர்பில் குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தால் தகவல்களை திரட்ட முடியாதுள்ளது. இதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன." என்றார்.

# சிறந்த அச்சு ஊடகர்களுக்கான விருது விழா






















இலங்கையில் அச்சு ஊடகத்துறையில் மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் வழங்கும் 25 ஆவது விழா செவ்வாய்க்கிழமை (07) கல்கிஸையில் இடம்பெற்றது. இதில் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை இந்த வருடம் 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பெற்றுக்கொண்டனர். அம்மையப்பபிள்ளை யோகமூர்த்தி, என். எம். அமீன், சந்திரிக்கா விஜேசுந்தர, பென்னட் ரூபசிங்க மற்றும் ஸனிதா கரீம் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெற்றுக்கொண்டனர்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 25ஆம் நாள் வியாழக்கிழமை

**மேஷம்** இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**ரிஷபம்** இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**மிதுனம்** இன்று பொறுமையுடன் இருப்பது சிறந்தது.

**கடகம்** இன்று முக்கியமான முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

**சிம்மம்** இன்று உங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள்.

**கன்னி** வாழ்க்கையின் அடிப்படை பற்றி இன்று நீங்கள் கற்பீர்கள்.

**துலாம்** இன்று உற்சாகம் குறைந்து காணப்படும்.

**விருச்சிகம்** இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள்.

**தனுசு** உங்கள் வாழ்க்கை தரத்தை இன்று உயர்த்துவீர்கள்.

**மகரம்** இன்று நீங்கள் சில ஏமாற்றங்களை சந்திக்க வாய்ப்பு உள்ளது.


**கும்பம்** இன்று நீங்கள் எதிர்பார்த்த பலன்களைப் பெறுவீர்கள்.

**மீனம்** இன்று கடினமான பணிகளையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று பிற்பகல் 12:03 வரை தசமி பின்பு ஏகாதசி.
**நட்சத்திரம்:** இன்று பிற்பகல் 03:05 வரை பரணி பின்பு கிருத்திகை.
**யோகம்:** சித்த,மரண.
**சந்திராஷ்டமம்:** அஸ்தம்,சித்திரை.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** 01:30 PM முதல் 03:00 PM வரை.
**குளிகை:** 09:00 AM முதல் 10:30 AM வரை.
**எமகண்டம்:** 06:00 AM முதல் 07:30 AM வரை.

# 115,000 மெ.தொன் அரிசி துறைமுகத்திலிருந்து விடுவிப்பு



இறக்குமதி அனுமதிப்பத்திரமன்றி அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கியதன் பின்னர் நேற்று (8) மாலை வரையில் 115,000 மெட்றிக் தொன் அரிசி துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

குறித்த 115,000 மெட்றிக் தொன் இறக்குமதி அரிசித் தொகையில் 45,000 மெட்றிக் தொன் பச்சை அரிசி மற்றும் 70,000 மெட்றிக் தொன் நாட்டு அரிசியும் உள்ளடங்குவதாக அவர் கூறியுள்ளார். இதேவேளை, சுங்கத்திற்கு அனுப்பப்படும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியானது விரைவில் விடுவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். நாடு எதிர்நோக்கும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக, இறக்குமதி அனுமதிப்பத்திரம் இன்றி அரிசியை இறக்குமதி செய்வதற்கான சந்தர்ப்பத்தை தனியார் துறையினருக்கு தற்போதைய அரசாங்கம் டிசம்பர் 4 ஆம் திகதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அரசியல் பழிவாங்கல்கள்

# பாதிக்கப்பட்டவர்களுக்காக சட்டத்தரணி அலுவலகம்

(கனுாஷியா புஷ்பகுமார்)

அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சட்டத்தரணி அலுவலகம் ஒன்றை திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே தெரிவித்தார். பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று (8) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.மேலும் கருத்து தெரிவித்த அவர்,

“இன்று, மக்கள் அன்றாடம் வாழ முடியாமல் சிரமப்படுகின்றனர். மிகுந்த எதிர்பார்ப்புடன் நியமிக்கப்பட்ட அரசாங்கம் இது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனே எரிபொருள், மின்சார கட்டணத்தை குறைத்து, ஆண்டுக்கு இருமுறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் என்று நினைத்தோம்.

ஆனால் இன்று பல இடங்களில் அரசியல் பழிவாங்கல்கள் மெல்ல மெல்ல அரங்கேறி வருகின்றன. இது போன்று அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்காக இன்னும் ஓரிரு நாட்களில் சட்டத்தரணி அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்” என்றார்.

# 2 கிலோ கொக்கெய்ன் போதைப்பொருடன் பொஸ்னிய பிரஜை விமான நிலையத்தில் கைது



கொக்கெய்ன் போதைப்பொருளை தனது பயணப்பெட்டியில் மறைத்து வைத்துக்கொண்டு, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயன்ற வெளிநாட்டவர் ஒருவர் நேற்று (08) காலை கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி 97 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் “கிறீன் செனல்” விரைவு வழியாக வெளியேறிய 66 வயதான பொஸ்னிய பிரஜை ஒருவரை விமான நிலையத்தின் வருகை முனையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் கைது செய்தனர்.

அவர் தனது பயணப் பெட்டிக்குள் கால்களை சுத்தம் செய்வதற்கு பயன்படுத்தப்படும் 114 பிரஷ்களுக்குள் 2 கிலோ 759 கிராம் கொக்கெய்னை மிக நுணுக்கமாக மறைத்து வைத்திருந்தார். கொலம்பியாவிலிருந்து குறித்த போதைப்பொருளுடன் பயணிக்கத் தொடங்கிய அவர் டோஹா ஊடாக நேற்று அதிகாலை 02.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

கைது செய்யப்பட்ட பொஸ்னிய பிரஜை மற்றும் கொக்கெய்ன் போதைப்பொருள் என்பன மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### சவால்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் அஞ்சாது

# சமூக மாற்றத்துக்கான பயணம் எதிர்ப்புகளை தாண்டியும் தொடரும்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



சவால்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஒருபோதும் அஞ்சாது. சமூக மாற்றத்துக்கான எமது பயணம் ஓரிரு நாட்களில் இடம்பெறக் கூடியதல்ல என்பதால் எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றை முறியடித்து முன்னோக்கி பயணிப்போம். அதற்காகவே மக்கள் ஆணை எமக்கு கிடைக்கப்பெற்றது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அசித நிரோசன எகொட வித்தான எம்.பி, கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான நோக்கத்தின் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்தியை மக்கள் அதிகாரத்துக்கு கொண்டுவந்தனர். ஆழமான மாற்றமொன்றுக்காகவே மக்கள் எமக்கு வாக்களித்தனர். இது நபர் மாற்றத்துக்கான மக்கள் ஆணை மாத்திரமல்ல ஒட்டுமொத்தமாக சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்தின் பிரகாரம் மக்கள் ஆணை வழங்கப்பட்டது.

இவ்வாறான மாற்றங்கள் ஏற்படும் போது அதற்கு எதிராக பல சவால்கள் வரும். எதிர்ப்பு தெரிவிக்கும் தரப்புகள் இருக்க முடியும். இது யதார்த்தம். மாற்றத்துக்கு எதிரான தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிப்பணிந்து நாம் செயல்பட மாட்டோம்.

நாட்டு மக்கள் வழங்கிய மக்கள் ஆணைக்கே நாம் கௌரவமளிக்கிறோம். அந்த ஆணையின் பிரகாரமே நாம் செயல்படுவோம். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்படும் சவால்களை முறியடித்து செயல்பட தயாராக இருக்கிறோம். சமூக மாற்றத்திற்கு அரச கட்டமைப்பின் பங்களிப்பு மாத்திரம் போதாது, மக்களின் பங்களிப்பும் அவசியம் என்பதையே நாம் நம்புகிறோம்.

அதனால் ஒழுக்க ரீதியான விவகாரங்களில் தலையீடு செய்வது அவசியமாகும். இது நிறுவன ரீதியான மாற்றம் அல்ல, சமூக ரீதியான மாற்றமாகும். சமூக மாற்றத்துக்கு மக்களின் மாற்றமும் பங்களிப்பும் அவசியமாகும். மக்களின் இயல்புநிலை மாற்றமடைய வேண்டும். இது ஓரிரு நாட்களில் இடம்பெறும் விடயம் அல்ல.

எமக்கு எதிரான தரப்பினரும் எமது செயல்பாடுகளில் மாற்றமடைவார்கள் என எண்ணுகிறோம். அதிகாரத்தின் ஊடாக எமது திட்டத்தை செய்ய முடியாது. கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பிலான முழுமையான அறிவை பெற அரச அதிகாரிகளும் மக்களும் தெரிந்துகொள்ள சில காலம் செல்லும். அதிகாரத்தின் ஊடாக மாத்திரமே செயல்பாடுகளை செய்துள்ள அனுபவம் அரச ஊழியர்களுக்கு இதற்கு முன்பிருந்தது. அதனால் இதில் சில குறைப்பாடுகள் ஏற்படலாம். அவை வேண்டுமென்றே செய்யும் செயல்கள் அல்ல என நினைக்கிறோம்.

ஜனவரி 21, 22 ஆம் திகதிகளில் நாடாளுமன்றில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் விவாதமொன்றை நடத்த தீர்மானித்துள்ளோம். அதன் ஊடாக அரச ஊழியர்களும், மக்களும் மேலும் அதுபற்றி அறிந்துகொள்ள முடியும்.” என்றார்.

# திருமலை சாம்பல் தீவுப் பகுதியில் 254 துப்பாக்கி ரவைகள் மீட்பு!

(கிண்ணியா கியாஸ் ஷாபி)

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, சாம்பல் தீவுப் பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றிலிருந்து 254 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டை, அடுத்து செவ்வாய்க்கிழமை(7) இரவு இந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டதாக உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர் .

நிலாவெளி, சாம்பல் தீவு வீதியில் சல்லி கோயிலுக்கு பின்னால், அமைந்துள்ள, தனியார் ஒருவருக்கு சொந்தமான காணி ஒன்றிலிருந்தே இந்த தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன.

காணி உரிமையாளர் தனது காணியை கூலியாட்கள் மூலம் துப்புரவு செய்து கொண்டிருந்தபோது அங்கு கருகிய நிலையில் பழைய தோட்டாக்கள் அடங்கிய பையொன்று இருப்பது தெரிய வந்ததாகவும், இது குறித்து அருகில் உள்ள கடற்படை தளத்துக்கு அறிவித்ததாகவும் தெரிய வருகின்றது .

இதனையடுத்து, கடற்படையினர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் தகவலை முறைப்பாட்டு அடிப்படையில் பதிவு செய்ததையடுத்து பொலிஸார் குறித்த இடத்துக்கு சென்று, அதனை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய T56 துப்பாக்கி தோட்டாக்கள் 245, ரேசர் துப்பாக்கி வெற்று தோட்டாக்கள் 03, வேறுவகை துப்பாக்கி தோட்டாக்கள் 06 என்பன அந்தப் பைக்குள் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வெடிபொருட்கள் குறித்து, திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில், அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் உப்புவெளி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## தாமதித்தால் தவிர்க்க நேரிடும்

உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவுக்கமைய உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் கோரப்பட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டமூலமே இது.

சட்டமூலத்தின்படி, 2023 மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் ரத்துச் செய்யப்படும்.

அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பில், வைப்பிலிடப்பட்ட கட்டுப்பணத்தையும் மீள செலுத்தவும் இந்த சட்டமூலம் வழிவகை செய்கிறது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னர் முறையான செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிய வருகிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரும் திகதியை தேர்தல் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும் எனவும், குறித்த திகதி சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதியில் இருந்து 3 மாத காலத்திற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும் என குறிப்பிட்டப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சி காலத்தில், நடத்துவதற்கு தயாராக இருந்த நிலையில், உள்ளூ ராட்சி தேர்தல் ரத்துச் செய்யப்பட்டது. பொருளாதார நெருக்கடியில் நாடு இருந்த நிலையில், தேர்தல் நடத்த முடியாது என்பதே, ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பாக இருந்தது.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு, தேர்தல் திணைக்களம் முழுமையாக தயாராக இருந்த நிலையில், இதற்கான நிதியை ஒதுக்க முடியாது என்று, திறைசேரி அறிவித்த நிலையில்தான், தேர்தல், கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. தேர்த லுக்கான நிதியை ஒதுக்குவதற்கு திறைசேரி பச்சைக்கொடி காட்டி இருந்த பொழுதிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த, ரணில் விக்கிரமசிங்க, அதற்கான அனுமதியை வழங்கவில்லை.

தேர்தலை எதிர்கொள்வதற்கு, ரணில் விக்கிரமசிங்கவும் அவரது கட்சியும் தயாராக இல்லாத நிலையில், திட்டமிட்டே அந்தத் தேர்தலை ஒத்தி வைத்ததாகவே, எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி இருந்தன.

உள்ளூராட்சி தேர்தலை மீண்டும் நடத்துவதில் ஏற்பட்டிருக்கின்ற, சட்ட சிக்கல், ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியையும் திக்கு முக்காட வைத்து இருக்கிறது. ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களை ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்பு, நடத்துமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. என்றாலும் சட்டை சிக்கல் இதனை தடுத்து நிற்கிறது.

அந்தத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை, இரத்து செய்து, புதிய விண்ணப்பங்களை கோருவதற்கு, இந்த சட்டம் மூலம் வழி வகுக்கிறது. அரசாங்கம் எடுத்திருக்கின்ற ஆக்கபூர்வமான நடவடிக்கை இது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

உள்ளூராட்சி தேர்தலும், மாகாண சபை தேர்தலும் இந்த ஆண்டுக்குள் நடத்தி முடிக்க வேண்டும். இந்த அரசாங்கத்திற்கு இது ஒரு அழுத்தமாகவே இருக்கப் போகிறது. 159 ஆசனங்களை கைப்பற்றி, வெற்றிவாகை சூடி இருக்கும் இந்த அரசாங்கம், நடைபெற இருக்கின்ற தேர்தல்களில், சிறு சரிவை சந்திக்க கூடிய சாத்தியம் இருக்கிறது. ஆட்சியில் இருப்பவர்களுக்கு, தேர்தல்களில் விழுக்காடு ஏற்படுவது சாதாரணம்.

போதிய பெரும்பான்மையை கையில் வைத்துக்கொண்டு, திண்டாடிச் செயல்படுவதில் அர்த்தம் இல்லை. பாராளுமன்றத்தில் எதிர்ப்பதற்கும் போதிய ஆட்களில்லை. அப்படித்தான் எதிர்த்தாலும், முறியடிக்கும் பலம், அரசிடம் தாராளமாகவே இருக்கின்றது.

கடந்த ஆட்சிக் காலங்களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது, கடந்த காலங்களில், பௌத்த தேசியவாத சிந்தனையோடு செயல்பட்ட அரசாங்கங்கள் எல்லாம், ஆட்சியைக் கைப்பற்றியதும், தங்களுக்கு வேண்டியதை எல்லாம், மிகக் குறுகிய காலத்தில் செய்து முடித்திருக்கிறார்கள். சரி, பிழை என்பதற்கு அப்பால், ஆரம்பக் கட்டங்களிலேயே முடித்திருக்கிறார்கள் என்பது தான் யதார்த்தம். ஆனால், நூறு நாட்களைக் கடந்தும், இந்த அரசு, இடதுசாரி சிந்தனையையோ அல்லது புதிய கொள்கைகளையோ ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவில்லை.

இனங்கள் பாதிக்கப்படாத வகையில், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதியும் தேசிய மக்கள் சக்தியும் இப்போது கூறுகிறார்கள். புதிய அரசியலமைப்பு உருவாக்குவதென்றால், ஏன் இந்த தாமதம் என்ற கேள்வி எழுகின்றது.

தாமதித்தால் எதனையும் தவிர்க்க நேரிடலாம். இது இலங்கை அரசியலில் யதார்த்தம்.

முன்னாள் ஜனாதிபதி, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சியில், புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு, சட்ட வரைவாக பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட பொழுது, ரணில் விக்ரமசிங்கவும் அவருடைய ஐக்கிய தேசியக் கட்சியும் பாராளுமன்றத்தினுள் அதனை எரித்தார்கள். அதோடு அது முடிந்து போனது... இதனை அடுத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதாக சொல்லிச் சொல்லியே ஏமாற்றினார்கள்.

அரசியலமைப்பை மாற்றுவதாக ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ, அதைப்பற்றி தொட்டுப் பார்க்க முதலே நாட்டை விட்டு தப்பி ஓடினார்...

இதுதான், இலங்கையின் காலம் கடத்தும் அரசியல் வரலாறு.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இந்த விடயங்களில் கை வைப்பதன் மூலம் தான், ஓரளவு தீர்வுகளை எட்ட முடியும். காலம் பிந்தினால், அரசியலில் புதிய நெருக்கடிகள் உருவாகிவிடும். இதுதான் வழமை. இந்த நிலை, இந்த அரசுக்கும் ஏற்பட்டு விடக்கூடாது.

இனப் பிரச்சினை தீர்வில், தமிழர்களின் அபிலாஷை களை தீர்க்கும் வகையில், யோசனைகள் முன்வைக்கப்பட்டால், அதற்கு ஆதரவு வழங்க தயாராக இருப்பதாக, தமிழ் அரசியல் கட்சிகள் தெரிவித்திருக்கும் நிலையில், புதிய அரசியலமைப்பை உருவாக்குவதில், இந்த அரசு இழுத்தடிப்பு செய்யுமாக இருந்தால், முன்னைய அரசுகள் செய்த தவறை மீட்பவர்களாகி விடுவார்கள்.

# சர்வதேசத்தை உலுக்கிய ட்ரம்பின் ஊடகவியலாளர் சந்திப்பு !

வெள்ளை மாளிகைக்குத் திரும்புவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்ப், பனாமா கால்வாய் மற்றும் கிரீன்லாந்தைக் கையகப்படுத்துவதற்கு இராணுவ பலத்தை பயன்படுத்துவதை நிராகரிக்க மறுத்துள்ளார்.

அதேநேரம், கனடாவை 51 ஆவது அமெரிக்க மாநிலமாக மாற்றுவதற்கு "பொருளாதார சக்தியை" பயன்படுத்துவதாகவும் அச்சுறுத்தினார்.

எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ட்ரம்ப், செவ்வாய்க்கிழமை (07) புளோரிடாவில் உள்ள Mar-a-Lago ரிசார்ட்டில் ஊடகவியலாளர்கள் முன்னிலையில் உரையாற்றும் போது இதனைக் கூறினார்.

மெக்சிகோ வளைகுடாவை "அமெரிக்கா வளைகுடா" என்று மறுபெயரிடுவதாகவும் இதன்போது அவர் உறுதியளித்தார்.

### கனடாவை 51 ஆவது அமெரிக்க மாநிலமாக்கும் திட்டம்

2024 நவம்பர் 5 தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை சந்தித்ததில் இருந்தே, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்ப் கனடாவை 51 ஆவது அமெரிக்க மாநிலமாக மாற்றும் யோசனையில் மூழ்கியுள்ளார்.

அவர் பல சமூக ஊடக இடுகைகளில் இதைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சில பதிவுகளில், திங்களன்று இராஜினாமா செய்த பிரதமரை "கவர்னர் ட்ரூடோ" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாயன்று நடந்த செய்தியாளர் சந்திப்பில், கனடாவை அமெரிக்காவிற்குள் உள்வாங்குவதற்கான தனது யோசனையை நிறைவேற்ற இராணுவ நடவடிக்கையைப் பயன்படுத்துவீர்களா என்று ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், கனடா மற்றும் அமெரிக்காவை ஒன்றாக இணைக்க "பொருளாதார சக்தியை" பயன்படுத்துவதை பரிசீலிப்பதாக கூறினார்.

அத்துடன், கனேடிய பொருட்களுக்கான அமெரிக்க செலவுகள் மற்றும் நாட்டிற்கான இராணுவ ஆதரவையும் ட்ரம்ப் இதன்போது குறை கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பரில், ட்ரம்ப் பதவியேற்றவுடன் இரு அண்டை நாடுகளும் அமெரிக்காவுக்குள் குடியேறும் மற்றும் போதைப்பொருள் ஓட்டத்தை நிவர்த்தி செய்யாவிட்டால் கனேடிய மற்றும் மெக்சிகன் பொருட்களுக்கு 25 சதவீத வரிகளை விதிக்க திட்டமிட்டுள்ளதாக அறிவித்தார்.

இந்த நிலையில் ட்ரம்பின் கருத்துக்கு கனடா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து கனடாவின் வெளி விவகார அமைச்சர் மெலனி ஜோலி கூறுகையில், "அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்பின் கருத்துக்கள் கனடாவை ஒரு வலுவான நாடாக மாற்றுவது பற்றிய முழுமையான புரிதல் இல்லாததைக் காட்டுகிறது.

நமது பொருளாதாரம் வலுவாக உள்ளது. எங்கள் மக்கள் வலிமையானவர்கள். அச்சுறுத்தல்களுக்கு நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்றார்.

அதேபோல் ட்ரூடோ கூறும்போது, "அமெரிக்காவுடன் கனடா இணைவதற்கு வாய்ப்பே இல்லை" என்றார்

### கிரீன்லாந்தின் பனாமா கால்வாய் கையகப்படுத்தும் முயற்சி

செவ்வாயன்று ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ட்ரம்ப், பனாமா கால்வாயை மீட்டெடுப்பது மற்றும் டென்மார்க்கிலிருந்து கிரீன்லாந்தைக் கைப்பற்றுவது குறித்தும் பேசினார்.

மேலும் தனது விரிவாக்கத் திட்டங்களைச் செயல்படுத்த இராணுவ பலத்தை பயன்படுத்துவதையும் நிராகரிக்க மறுத்து விட்டார்.

மத்திய அமெரிக்க வர்த்தகப் பாதை மற்றும் டென்மார்க்கின் தன்னாட்சிப் பிரதேசத்தின் கட்டுப்பாட்டைப் பெற முயற்சிக்கும்போது, இராணுவ அல்லது பொருளாதார வற்புறுத்தலைப் பயன்படுத்த மட்டோம் என்று உலகிற்கு உறுதியளிக்க முடியுமா என்று ஊடகவியலாளர்கள் ட்ரம்பிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி, "இல்லை, என்னால் அது தொடர்பில் உறுதியளிக்க முடியாது.

பனாமா கால்வாய் எங்கள் இராணுவத்திற்காகக் நிர்மாணிக்கப்பட்டது என்றார்.

தேர்தலில் வெற்றி பெற்றதில் இருந்து, ட்ரம்ப் பனாமா கால்வாயை இணைக்கும் தனது விருப்பத்தை மீண்டும் வலியுறுத்தினார்.






மேலும் கடந்த மாதம் உயிரிழந்த முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்டரையும் சாடிப் பேசிய அவர், ஜிம்மி கார்ட்டர் மேற்கொண்ட ஒப்பந்தப் பேச்சுவார்த்தை 51 மைல் நீர்வழியின் முழு கட்டுப்பாட்டையும் பனாமாவுக்கு வழங்கியதாக கூறினார்.

மேலும், கிரீன்லாந்தை வாங்குவதற்கான தனது விருப்பத்தை டென்மார்க் எதிர்த்தால், அது "அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கு இன்றியமையாதது" என்றும் ட்ரம்ப் கூறினார்.

இதற்கு பதிலளித்த டென்மார்க், கிரீன்லாந்து "விற்பனைக்கு இல்லை" என்று கூறியது.

"நாங்கள் நெருங்கிய கூட்டாளிகள் மற்றும் பங்காளிகளாக இருக்கும்போது நிதி ரீதியாக ஒருவருக்கொருவர் சண்டையிட இது ஒரு நல்ல வழி அல்ல" என்று டென்மார்க் பிரதமர் மெட் ஃ பிரடெரிக்சன் செவ்வாய் இரவு கூறினார்.

### மெக்சிகோ வளைகுடாவை அமெரிக்கா வளைகுடா என பெயர் மாற்றும் திட்டம்

அதே செய்தியாளர் கூட்டத்தில், ட்ரம்ப் தனது நிர்வாகம் மெக்சிகோ வளைகுடாவின் பெயரை "அமெரிக்கா வளைகுடா" என்று மாற்ற முயற்சிப்பதாக அறிவித்தார்.

"மெக்சிகோ வளைகுடாவின் பெயரை அழகான வளையத்தைக் கொண்ட அமெரிக்க வளைகுடா என்று மாற்றப் போகிறோம். இது நிறைய பிரதேசங்களை உள்ளடக்கியது. அமெரிக்கா வளைகுடா! என்ன அழகான பெயர். அது பொருத்தமானது" என்று அவர் கூறினார்.

பெட்ரோலியம் நிறைந்த மெக்சிகோ வளைகுடா நீர்நிலை உலகின் ஒன்பதாவது பெரியதாகும்.

மேலும் 1500 ஆம் ஆண்டுகளில் இருந்து அது மெக்சிகோ வளைகுடா என வரைபடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மெக்சிகோ வளைகுடாவை மறுபெயரிடுவதற்கான ட்ரம்பின் வாக்குறுதியானது, வட அமெரிக்காவின் மிக உயரமான மலை சிகரமான தெனாலியின் பெயரை மவுண்ட் மெக்கின்லி என மாற்றுவதற்கான அவரது முந்தைய சபதத்தையும் எதிரொலித்தது.

பூர்வீக அமெரிக்கர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அலாஸ்கன் மலையின் பெயரை முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மாற்றினார்.

### பணயக்கைதிகள் விடயத்தில் ஹமாஸுக்கு மீண்டும் எச்சரிக்கை

2023 ஒக்டோபரில் இஸ்ரேலுக்கு எதிராக போர் தொடுத்த போது சிறைபிடித்த அனைத்து பணயக்கைதிகளையும் ஹமாஸ் விடுவிக்காவிட்டால், தான் வெள்ளை மாளிகைக்கு திரும்பும் நேரத்தில், "மத்திய கிழக்கில் அனைத்து நரகங்களும் வெடிக்கும்" என்ற தனது அச்சுறுத்தலை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்ப் ஊடகவியலாளர் சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தினார்.

அத்துடன் இது ஹமாஸுக்கும், வெளிப்படையாக யாருக்கும் நல்லதாக அமையாது என்றும் ட்ரம்ப் எச்சரித்தார்.

இஸ்ரேல் மீதான ஹமாஸின் தாக்குதலின் போது, சுமார் 250 பணயக்கைதிகள் காஸாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அவர்களில் 96 பேர் எஞ்சியுள்ளனர். இதில் 34 பேர் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

### நேட்டோ செலவு


நேட்டோ உறுப்பினர்கள் தங்களது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை பாதுகாப்பிற்காக செலவிட வேண்டும் என்று ட்ரம்ப் கூறினார், இது தற்போதைய 2 சதவீத இலக்கில் இருந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பு.

பதவியேற்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதி, பெரும்பாலான நேட்டோ உறுப்பினர்கள் தங்கள் நியாயமான பங்கை செலுத்தவில்லை என்று அடிக்கடி முறைப்பாடு அளித்தார்.

மேலும் அவர் தேர்தல் பிர சாரத்தின் போது பாதுகாப்பு பங்க ளிப்புகளை அதிகரிக்க வேண்டும் என்றும் கோரினார்.



ஜெயராம் அனோஜன்



## முல்லைத்தீவில்

# தற்காலிக மருத்துவ விடுதியில் அல்லலுறும் நோயாளர்கள்





முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நோயாளர்களுக்கான சரியான இடவசதி இல்லாததால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை அண்மைய நாட்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆண்களுக்கு ஒரு விடுதியும் (இலக்கம்2) பெண்களுக்கு ஒரு விடுதியும் (இலக்கம்1) காணப்படுகின்றது. இரண்டு விடுதிகளிலும் சுமார் 60 பேர் வரையிலேயே தங்கி நின்று சிசிக்சை பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் மாவட்ட மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால் மருத்துவ விடுதிகளில் போதிய இடவசதி இல்லாத நிலையினால் நிலத்திலும் கட்டிடங்களின் ஓரங்களிலும் நோயாளர்கள் படுத்து உறங்குகின்றனர். இந்த இரண்டு மருத்துவ விடுதிகளும் தற்காலிக மருத்துவ விடுதிகளாகவே கட்டப்பட்டுள்ள நிலையில் அதில் உள்ள மெத்தைகள் நோயாளர்களுக்குப் போதா நிலை காணப்படுகின்றது. போருக்கு முன்னர் 110 மில்லியன் ரூபா நிதியில் கட்டப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கான மருத்துவ விடுதிகள் இரண்டு தற்காலிகமாகவே கட்டப்பட்ட நிலையில் இதுவரை மாற்று வழி எதுவும் முன்னெடுக்கப்படவில்லை

மாவட்ட மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு செல்வதால் நோயாளர்கள் கட்டிடத்தின் ஓடைப்பகுதிகளில் படுத்து உறங்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

விடுதி தொடர்பில் வடமாகாண ஆளுநர் கவனத்தில் எடுத்து இனிவரும் காலங்களில் நிரந்தர மருத்துவ விடுதிகள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்பது நோயாளர்களின் எதிர்பார்ப்பாகும்.

# சர்வதேச விவாதப் போட்டியில் சாதித்த தமிழ் மாணவர் அணி

சர்வதேச விவாதப் போட்டியில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களை கொண்ட அறிவியல் தமிழ் அணி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

மலேசியா திரங்காணு பல்கலைக்கழகம், சர்வதேச தமிழ் இளையோர் மாநாட்டை முன்னிட்டு நடத்திய அனைத்துலக விண்ணரங்க சொற்போர் விவாத போட்டியில் குறித்த அறிவியல் தமிழ் அணி முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் சுற்றுகளில் முறையே இந்தியா,சிங்கப்பூர், மலேசியா அணிகளை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது. இந்த நிலையில் இறுதிப் போட்டியில்



இந்தியாவுடன் மோதிய இலங்கை அணி தோல்வியடைந்தது. இருப்பினும், சர்வதேச விவாதப் போட்டியில் இரண்டாமிடம் பெற்று அசத்தியது.

# இந்து மதகுரு மீது தாக்குதல்

## றமேஸ் அமதி அடிகளார் கண்டனம்

கனகாம்பிகை குளத்தில் அமைந்துள்ள கிராம அலுவலகத்தில் சிவஸ்ரீ சிவகுமாரன் குருக்கள் தாக்கப்பட்டதை கண்டிப்பதாக கத்தோலிக்க திருச்சபையின் அமலமரித்தியாகிகளின் நீதி சமாதான ஆணைக்குழுவின் இணைப்பாளர் அருட் கலாநிதி றமேஸ் அமதி அடிகளார் தெரிவித்துள்ளார்.

குடும்ப மீளாய்வு நோக்கத்திற்காகச் சென்றிருந்த சிவஸ்ரீ சிவகுமாரன் குருக்கள் அப்பகுதியில் வசித்துவரும் நபர் ஒருவரினால் தாக்கப்பட்டு அவர் அணிந்திருந்த மாலையும் அறுத்தெறியப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் காயப்பட்ட மதகுருவானவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அது தொடர்பில் அமதி அடிகளார் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இக்காலத்தில் மதகுருக்கள் பலவாறு அவமதிக்கப்படுவதையும், தாக்கப்படுவதையும் நாம் காண்கிறோம். உயர் கலாசார மற்றும் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்கள் கட்டிக்காக்கப்படும் கிளிநொச்சி மண்ணில் நடந்த இந்த அநாகரிக செயலை கண்டிப்பதோடு, இத்தகைய செயற்பாடுகள் இனியும் இடம்பெறா வண்ணம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

# வடக்கில் தொடர்ச்சியாக தறிக்கப்படும் பனை மரங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சியில் சட்டவிரோதமாகப் பனை மரங்கள் தொடர்ச்சியாகத் தறிக்கப்பட்டு வருகின்றன என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கிளிநொச்சி பளை பகுதியில் சட்டவிரோதமாகப் பனை மரம் வெட்டப்பட்ட பகுதியையும் பனை அபிவிருத்தி சபையினர் பார்வையிட்டதுடன்

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் செய்துள்ளனர் என அவர் கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

யாழ் மற்றும் கிளிநொச்சி உட்பட வடக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் சட்டவிரோதமாகப் பனை மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு பனைமரங்கள் வெட்டப்படுகின்ற பகுதிகளில் பனை அபிவிருத்தி சபையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் பளைப் பகுதியில் பல பனை மரங்கள் வெட்டப்பட்டு



ஏற்றப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய உடனடியாக பனை அபிவிருத்தி சபையினர் குறித்த பகுதியைச் சுற்றிவளைத்தனர். இதன் போது அங்கு வெட்டப்பட்ட பனை மரங்களில் ஒரு தொகுதியை ஏற்றிக் கொண்டு சென்றுவிட்ட அதேநேரம் மிகுதி மரங்கள் அங்கு காணப்பட்டன. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# முகமாலையில் நீரில் மூழ்கி ஒருவர் பலி

கிளிநொச்சி – முகமாலைப் பகுதியில் நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது. முகமாலை – வடக்கு பகுதியில் ஆட்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளதுள்ளதாகவும் முகமாலை – வடக்கு பளையினை சேர்ந்த மாணிக்கம் உதயகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இச்சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மலக்கழிவை உடன் அகற்றவும் தவறினால் சட்ட நடவடிக்கை






(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்திலிருந்து வெளியேறும் மலக்கழிவை உடனடியாக 24 மணித்தியாலத்துக்குள் அகற்றி, சுகாதாரத்தைப் பேணுமாறு உத்தரவிடப்பட்டுள்ளதுடன்.

தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் செயற்படும் கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மலக்கழிவு வெளியேறுகின்ற நிலையில் உரிய அதிகாரிகளுக்குச் சுகாதாரத் துறையினர் சுகாதாரத்தைப் பேணுமாறு தெரிவித்துள்ளனர். ஆனால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிலையில் நேற்று கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் குறித்த பகுதிக்குச் சென்ற நிலையிலே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# யாழில் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

(ரகுபரன்)

கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு பிரதேச மட்ட விசேட தேவையுடையோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் கல்லுண்டாய் பகுதியில் டெங்கு விழிப்புணர்வு செயற்பாடுகள் நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது.

இச் செயற்பாட்டில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால், டெங்கு நோயினால் ஏற்படுகின்ற பாதிப்புகள் மற்றும் அவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் கிராமப்






பகுதிகளில் சிரமதானமும் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்பாட்டில் சமூக சேவை கிளை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர், மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர்கள், கிராம மக்கள் மற்றும் கிராம மட்ட குழு அமைப்பின் அங்கத்தவர்கள் உட்பட 38 பேர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆனைக்கோட்டையில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(பு.கஜிந்தன்)

ஆனைக்கோட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள கரைபிரான் ஆதிவிநாயகர் ஆலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தினால் இந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. நவரஞ்சனின் தலைமையில் ஆலய பிரதம குரு முன்னிலையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. அமெரிக்கா நியூயோர்க்கில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலயத்தின் சீடர்களின் நிதி அனுசரணையில், வன்னிப் பட்டறை உதவிக்கரத்தின் சைதன்ய சேவை ஊடாக இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

# வவுனியாவில் உளுந்து விளைச்சல் குறைவு

வவுனியாவில் உளுந்துச்செய்கையில் இம்முறை மஞ்சள் நோய் தாக்கத்தினால் விளைச்சல் குறைவதற்கான வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்

பல ஏக்க நிலப்பரப்பில் உளுந்து செய்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்துக்குப் பின்னரான கால பகுதியில் ஏற்பட்ட மஞ்சள் நோய் தாக்கத்தினால் உளுந்து செய்கையில் விளைச்சல் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள விவசாயிகள் அதனைக் கட்டுப்படுத்த ஏதுவான முறைகள் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

உளுந்துக்கு விலை நிர்ணயம் இல்லாமையாலும் தாம் செலவு செய்யும் பணத்தைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படும் நிலையில் இவ்வாறு நோய் தாக்கங்களும் தொடர்ந்து வருவதனால் நாம் எதிர்வரும் காலங்களில் உளுந்துச் செய்கையைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் 5650 ஹெக்டேயரில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளதாகவும் மஞ்சள் நோய் தாக்கம் பயிர்களில் ஏற்பட்டுள்ள நிலையில் விவசாயிகளுக்கு அதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

# சர்வதேச சட்ட மாநாடு

யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை 25ம், 26ம் திகதிகளில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையானது இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடானது மருத்துவ பீடத்தின் ஹூவர் கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை வரை நடைபெறவுள்ளது.

செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு எனும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்து கொண்டு மாநாட்டின் தொனிப்பொருளை சார்ந்ததான பல்வேறு விடயப்பரப்புக்கள் பற்றி உரையாடவுள்ளனர்.

மேலும் மாநாட்டின் ஓரங்கமாக மாற்றுப் பிணக்குத் தீர்வு முறைகள் பற்றிய குறிப்பாக மத்தியஸ்தம் தொடர்பான சிறப்பு அமர்வு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது தை மாதம் 24ம் திகதி பிற்பகல் 4.30 மணி முதல் 6.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இந்தியாவைச் சேரந்த நிபுணர்கள் பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றி பயன் பெற்றுக்கொள்ளுமாறும் மாநாட்டு ஒழுங்கமைப்புக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# மட்டு.படுவான்கரையை பாடாய்ப்படுத்தும் காட்டு யானைகள்

## படையெடுக்கும் யானைகளால் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்வு



எஸ்.கே.ராதிகா

வயலும் வயல் சூழ்ந்த சூழலுமான மருதநிலமும், காடும் காடு சார்ந்த சூழலுமான முல்லை நிலமும், மணலும் மாணல் சார்ந்த சூழலுமான பாலை நிலமும், மலையும் மலைசார்ந்த சூழலுமான குறிஞ்சி நிலமும் என நால்வகை நிலங்களும் ஒருங்கே அமையப்பெற்ற பிரதேசம் மட்டக்களப்பின் மேற்குப் பக்கமாக அமைந்துள்ள படுவான்கரைப் பிரதேசமாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இயற்கை வனப்புமிக்க பிரதேசமே போரதீவுப்பற்று பிரதேசமாகும்.

படுவான்கரைப் பிரதேசமக்கள் ஏனையவர்களைப் போல் சொகுசு வாழ்க்கை வாழவில்லை.தாமும் தமது குடும்பமும் என உடனுக்கு உடன் உழைத்தே வாழ்நாளைக் கழித்து வருகின்றனர். வேளாண்மைச் செய்கைக்கு மாத்திரமின்றி நிலக்கடலை. உழுந்து, சோளன், பயறு, மரவள்ளி, குரக்கன், கௌப்பி என பல மேட்டுநிலப் பயிர் செய்கைகளுக்கும் பெயர்போன இந்தப்பிரதேசம் வரலாறு காணாத பேரழிவுகளை சந்தித்திருந்தது. என்றால் அவற்றை

### வனாந்தரமாகும் விவசாய கிராமங்கள்



மறுக்கவோ, மறைக்கவோ, முடியாது. இவற்றை எல்லாம் கடந்து தற்போதைய சமூகமான சூழ்நிலையில் அப்பிரதேச மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்நிலையில் காட்டு யானைகளின் அட்டகாசங்களும் அவற்றினால் ஏற்படும் அழிவுகளும் அவர்களது இயல்பு வாழ்க்கையை துவம்சம் செய்து வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய நிலப்பரப்பான பகுதியில் அமைந்துள்ள படுவான்கரைப் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகளும் அட்டகாசங்களும் அடாவடித் தனங்ளும், நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே! உள்ளன. அதிலும் எல்லையோரக் கிராமங்களான பாலையடிவட்டை, காக்காச்சிவட்டை, நெல்லிக்காடு, விவேகானந்தபுரம், திக்கோடை தும்பங்கேணி, இளைஞர் விவசாயத்திட்டம், களுமுந்தன்வெளி, புன்னக்குளம், சுரவணையடியூற்று, வெல்லாவெளி, விவேகானந்தபுரம், றாணமடு, சின்னவத்தை, தாந்தாமலை, கச்சக்கொடிச்சுவாமிமலை, நெல்லிக்காடு, புல்லுமலை, பாவக்கொடிச சோனை, கண்டியனாறு, கரடியனாறு, போன்ற பல கிராமங்களிலேயே யானைகளின் அட்டகாசங்கள், தொடர்ந்தும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

படுவான்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள போரதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, ஏறாவூர் பற்று, வாகரை, கிரான், போன்ற பல பிரிவுகளில் மக்கள் செறிந்து வாழ்கின்றனர் விவசாயத்தினையும், கால்நடை வளப்புக்களையும், பிரதான தொழிலாகக் கொண்டுள்ள அங்குள்ள மக்கள் வீட்டுத்தோட்டம், கைத்தொழில், கோழிவளர்ப்பு, செங்கல் வெட்டுதல், கூலிவேலை செய்தல், போன்ற இதரதொழில்களையும் மேற்கொன்டு வருகின்றனர்.

வருடாந்தம் ஐப்பசி தொடக்கம் மாசி மாதம் வரையான காலப்பகுதிகளில் பெரும்போக வேளாண்மைச் செய்கைகளையும் தோட்டங்களையும் பரந்த அளவிலும், சித்திரை தொடக்கம் ஆடி மாதம் காலப்பகுதிகளில் சிறுபோக வேளாண்மைச் செய்கையையும் குறைந்த அளவிலான காலபோக வேளாண்மைச் செய்கையினையும் இந்தப்பகுதி மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு மேற்கொள்ளும் தமது ஜீவனோபாயத்திற்கு மிகநீண்டகாலமாக இருந்து காட்டு யானைகளின் அட்டகாசங்கள் அதிகரித்தே வருகின்றன என அந்தப்பிரதேச மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

நாங்கள் எமது கிராமத்திலிருந்து சுமார் 10 தடவைகளுக்கு மேல் இடம் பெயர்ந்து பற்பல இடங்களில் வாழ்ந்து வந்தோம், இறுதியாக கடந்த 2007 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்துள்ளோம். கடந்த யுத்தத்தினால் எமது மக்கள் சகல உடமைகளையும் இழந்துள்ளார்கள். தற்போது காட்டு யானைகள் எம் உறவுகளின் வீடுகளை இரவும் பகலுமாக மாறிமாறி உடைத்து வருகின்றன. இதுவரை எமது பகுதியில் 5 பேருக்கு மேல் காட்டு யானைகள் அடித்துக் கொன்று இருக்கின்றது. சுமார் 50 இற்கு மேற்பட்ட வீடுகள் யானைகளினால் முற்றாக உடைக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் துன்பப்பட்ட நாங்கள் தற்போது காட்டு யானைகளினால் துன்பப் பட்டுக்கொண்டே இருக்கின்றோம். இந்த நிலமை தொடருமாக இருந்தால் நாங்கள் யுத்தகாலத்தில் எவ்வாறு இடம் பெயர்ந்தோமோ அது போல் தற்போது காட்டு யானைகளுக்கும் பயந்து இடம் பெயரவேண்டிய நிலைமை ஏற்படும் என தனது மன ஆதங்கத்தை மிகவும் உரத்த குரலில் எடுத்தியம்பினார். பாலையடிவட்டையைச் சேர்ந்த அ.தயாபரன்.

இது இவ்வாறிருக்க நாங்கள் தற்போது யானைகளின் அட்டகாசத்தினால் படும் பாடுகளைப்பற்றி பிரதேச செயலாளர் பிரதேச சபை, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வனஜீவராசிகள் திணைக்களம், அரசாங்க அதிபர், போன்ற பலருக்கும் அறிவித்தும் எமக்குரிய பலன் இதுவரை கிட்டவில்லை. நாங்கள் கோருவது யானைகள் கிராமத்திற்குள் உட்புகுரும் மையப் பகுதிகளைச் சுற்றி மின்வேலிகள் அமைத்துத் தரவேண்டும் என்பதுவே ஆகும்.

ஆனால் எமக்கு நான்கு, ஐந்து யானை வெடிகள் மாத்திரம் தரப்படுகின்றன யானைகள் வரும் போது அதனை நாங்கள் வெடிக்கவைத்தால் அந்த வெடிகளை யானைகள் ஏனோ, தானோ என்று விட்டுப்போகின்றன.

அந்த வெடிகளுக்கு இங்குள்ள யானைகள் பழக்கப்பட்டு விட்டன. நாம் எத்தனை தடவைகள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மின்வேலி அமைக்க வேண்டும் என்று கூறியும் அது இதுவரை எமக்குக் கைகூடவில்லை எனக் கூறினார்.

இது இவ்வாறிருக்க இந்த விவசாயிகளின் கத்தரி, வெண்டி, மரவள்ளி, தென்னை, வாழைத் தோட்டங்களையும், அழித்து வருவதோடு வேளாண்மை வயல்களையும் அழித்து நெல் மூட்டைகளையும் உண்டும், சேதப்படுத்தியும், வருகின்றன என அவரது மன ஆதங்கத்தை எம்மிடம் கொட்டிதீர்தனர். காக்காச்சுவட்டடைக் கிராமத்தினைச் சேர்ந்த கிராமவாசி ரி.தியாகராஜா.

காட்டுயானைகளின் தாக்குதலுக்கும் அட்டகாசங்களுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ள படுவான்கரைப் பிரதேச மக்கள், கடந்த காலங்களில் 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ளம், அதனைத் தொடர்து, 1978 ஆண்டு வந்த சூறாவளி, பின் தொடர்ச்சியாகப் பீடித்த கோரயுத்தம், பின்னர் தொடரந்து வரட்சி, வெள்ள அனர்த்தம், போன்ற இவைகனைத்திற்கும் முகம்கொடுத்து தற்போது மெல்லமெல்ல மீண்டெழுந்து வந்து கொண்டிருக்கும் நிலையில் "மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதுபோல" தற்போது காட்டு யானைகள் கூட்டமாகவும் தனியாகவும் கிராமங்களும், மக்களின் பயிர் பச்சைகளுக்குள்ளும், புகுந்த அப்பாவி மக்களின் உயிர்களையும், உடமைகளையும் குடியிருக்கும் வீடுகளையும் அழித்து வருவது மட்டுமல்லாமல், அவர்களது வாழ்வாதாரததிற்குத் துணை நிற்கின்ற தொழில்களையும் அழித்து வருவது என்பது மிகவும் வேதனையான விடயமே!

இதனை மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பிரதிபலிக்கும் அதிகாரிகள் அரசியல் பிரமுகர்கள் துரித கதியில் நடவடிக்கை எடுக்க வேண்டுமல்வா?

இப்பிரதேச மக்கள் பன்னெடுங்காலமாக சொல்லொணாத் துயரங்களை எதிர் கொண்டவர்கள், அவர்களை தொடர்ந்தும் துன்புறுத்தும் நடவடிக்கைகள் என்பதற்கு மேலாக காட்டு யானைகளின் தொல்லைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

ஆனால் இப்பிரதேசம் காட்டு யானைகள் வாழும் பிரதேசம் இல்லை.மாறாக மக்கள் குடியிருக்கும் பிரதேசமாகும், யானைகள் வாழும் பிரதேசம் சரணாலயம் ஆகும், எனவே, இங்குள் மக்கள் குடியிருப்புக்கள் வாழும் இடங்களிலுள்ள காட்டு யானைகளை வெடிகள் வைத்தோ அல்லது மின்சார வேலிகள் அமைத்தோ தடை செய்வது என்பதற்கு மேலாக இவைகளை பிடித்துக் கொண்டு யானைகள் வாழும் சரணாலயங்களில் விடுவதுதான் சாலச் சிறந்த விடயமாகும்.

மக்கள் வாழும் குடியிருப்புக்களுக்கள் காட்டுயானைகள் வருவது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இவைகளைப் பிடித்து சரணாலயங்களில் விட்டால் யானை வேலி அமைப்பது என்பது அவசியமில்லை. எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் வாழும் குடியிருப்புக்களின் அருகிலுள்ள பற்றைக் காடுகளில் தங்கியுள்ள காட்டு யானைகளை பிடித்துக்கொண்டு சரணாலயங்களில் விடவேண்டும், யானை வேலி அமைக்கப்பட்ட இடத்திற்குள் இருக்கின்ற யானைகளை துரத்தி வேலிக்கு அப்பால்விடுவிட வேண்டும். புதிதாக யானை வேலிகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும். அடுத்து மக்கள் குடியிருக்கும் பகுதியில் இருக்கின்ற காட்டுப் பகுதியினுள் தொடர்ந்து காட்டு யானைகள் தங்கி நிற்கின்றன. அக்காடுகளை துப்பரவு செய்து அங்குள்ள யானைகள் வெளியேற்ற வேண்டும்.

இந்நிலையில் 1900 ஆண்டுகளில் நாட்டில் 88 சதவீதம் காடுகள் இருந்தன ஆனால் தற்போது 20 மில்லியனுக்கு மேலாக மக்களும் 18 சத வீதத்திற்குக்குறைவான காடுகளுமே உள்ளன.

இதனால் காடுகளிலுள்ள யானைகள் உணவை தேடி கிராமங்களுக்குள் செல்கின்றன இருந்த போதிலும் இலங்கையில் மின்சார வேலிகள் அமைக்கும் செயற்பாடு

### ஊருக்குள் நுழையும் யானைகளை வனாந்தரங்களில் விட கோரிக்கை விடுத்தும் பயனில்லை

நடைமுறையிலுள்ளன.
ஆனாலும் இத்திட்டதினால் யானைகளின் தொல்லைகளைக் குறைக்கலாமே தவிர முற்றுமுழுதாக ஈடு செய்ய முடியாது எனத் தெரியவருகின்றது.

எது எப்படி இருப்பினும் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பிரதேசத்தில் காட்டு யானைகள் மக்களின் வீடுகளையும், பயிர்களையும் அழிப்பதை இனிமேலும் கட்டுப்படுத்த வில்லையாயின் அப்பகுதியிலுள்ள காட்டுயானைகளின் அட்டகாசத்திற்குட்படும் மக்கள் தமது சொத்துக்கள் அனைத்தினையும் விட்டு, விட்டு கடந்த யுத்த காலத்தில் இடம்பெயர்ந்தது போல் மேலும், இடம்பெயர் வேண்டிய நிலமை ஏற்படும் எனவும் அப்பகுதி மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

கிராமத்திற்குள் காட்டு யானைகள் புகுந்தவுடன் மக்கள் எமக்கு அழைப்புக்களை எடுப்பார்கள் உடன் அங்கு சென்று நாம் யானைவெடிகளை வைத்து யானைகளை விரட்டி வருகின்றோம். மேலதிகமாக மக்களிடத்திலும் யானை வெடிகளை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கி வருகின்றோம் என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் தெரிவிக்கின்றனர்.


எனினும் நாம் அழைப்பு எடுக்கும்போது என வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் உரியவாறு பதிலளிப்பல்லை எனவும் யானைகள் ஊருகுள் நுளைந்தால் நாம் அவர்களுக்கு அறிவிப்போம். அவர் கள் உரிய நேரத்திற்கு வரமாட்டார்கள். அவர்கள் வருவதற்கு இடையில் எமது பயிர்களை யானைகள் அழித்துவிட்டுச் செல்கின்றன என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர் எனவே சம்மந்தப்பட்ட, அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், அப்பகுதி மக்களின் நிலைமையினைக் கருத்தில் கொண்டு உரிய வேலைத் திட்டத்தினை காலநேரம் பாராமல் மிகவிரையில் அமுல்படுத்த வேண்டும் என்பதையே அப்பகுதி மக்கள் எதிர் பார்த்திருக்கின்றனர்.

## சமூக வலைத்தளங்களில்
# வினாத்தாள்களை வெளியிட்ட ஆசிரியர் இடைநிறுத்தம்

( அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

வடமத்திய மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளின் 06 ஆம் மற்றும் 07ஆம் தரங்களின் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்களை சமூக வலைத் தளங்கள் ஊடாக வெளியிட்ட ஆசிரியரின் பணி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்.

அதாவது, ஆறாம் தரம் தொடர்பான புவியியல் வினாத்தாளின் விடைத்தாள்களை வெளியிடப்பட்டுள்ள விவகாரம் தொடர்பிலேயே ஆசிரியர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



வடமத்திய மாகாணத்தில் உள்ள அரச பாடசாலைகளில் 11 ஆம் தர பரீட்சை தொடர்பில் மேலும் இரு வினாத்தாள் வெளியாகியுள்ளதாக கடந்த சில நாட்களாக தகவல்கள் கிடைத்திருந்தன.

இதேவேளை விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்கள் தொடர்பான வினாத்தாள்கள் இவ்வாறு வெளியாகியுள்ளதாகவும் வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்தார்..

# சர்வதேச மாணிக்கக் கல் கண்காட்சி நேற்று ஆரம்பம்

(பேருவளை பீ.எம் முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரண வர்த்தக



சங்கத்தின் ஏற்பாட்டிலும், மாணிக்கக் கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையின் அனுசரணையுடனான "GEM SRI LANKA 2025 - BENTOTA" சர்வதேச கண்காட்சி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இக்கண்காட்சியில் அதிதிகளாக அமைச்சர் சுனில் ஹந்துன்ஹெத்தி, சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்க தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பளீல், ஜெம்ஸ் ஸ்ரீலங்கா தலைவர் ஹில்மி ஹாஸிம், உப தலைவர் ரிஸ்வான் நயீம், செயலாளர் அஷ்கர் முபாரக், பொருளாளர் மிஷ்கர் முனவ்வர் உட்பட சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், பேருவளை நகரசபை



முன்னாள் உறுப்பினரும், தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினருமான அரூஸ் அஸாத், ஜாமியா நளீமிய்யா கலாபீட தலைவர் யாகூத் நளீம், நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்ஹ். ஏ.ஸி அகார் முஹம்மத் (நளீமி), சீனன்கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.என்.எம் ஷிஹாப் உட்பட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அநுராதபுரம் பகுதியில் போலி கச்சேரி நடத்திய மூவர் கைது

(அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப் )

அநுராதபுரம் பகுதியில் போலி கச்சேரியை நடத்தி வந்த தம்பதியர் மற்றும் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த மற்றுமொரு நபரையும் கண்டி பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். நுவரெலியா கிரிகேரி ஏரிக்கு அருகில் காணி ஒன்றுக்கு போலி பத்திரம் தயாரித்து 1 கோடி 10 இலட்சம் ரூபாவிற்கு கண்டி பகுதியைச் சேர்ந்த நபரொருவருக்கு விற்பனை செய்துள்ளார். அப்போது அது போலியான பத்திரம் என தெரியவந்ததையடுத்து, ஹொரணை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஊடாக தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர் நில பரிவர்த்தனை தரகராக செயல்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி அநுராதபுரத்தில் உள்ள மற்றுமொரு போலி கச்சேரியில் பொலிஸார் நடத்திய சோதனையில் போலி அடையாள அட்டைகள், ஓட்டுனர் உரிமம் , பரீட்சை சான்றிதழ், இறப்பு சான்றிதழ் மற்றும் கடவுச்சீட்டு உள்ளிட்ட போலி ஆவணங்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# தேர்தல் ஆணையாளரிடம் மகஜர் கையளித்த சமூக ஒழுங்கு அமைப்பு



உள்ளூராட்சி தேர்தல் 2025 சம்பந்தமாக மகஜர் கையளித்த கிழக்கு மாகாணம் அக்கரைப்பற்றில் இயங்கும் சமூக ஒழுங்கு அமைப்பு (SOCIAL REGULATORS) எனும் சமூக சேவை செயற்பாட்டாளர்கள் கடந்த திங்கட்கிழமை தேர்தல் ஆணையாளர் ரத்நாயக்கவைச் சந்தித்து மகஜர் ஒன்றை கையளித்தனர்.

சமூக ஒழுங்கு அமைப்பு எனும் பெயரில் இயங்கும் அமைப்பின் தலைவர் முனவ்வர் ஹஸன் மற்றும் செயலாளர் ஷிஹாப்தீன் ஆகியோரினால்,தேர்தல் ஆணையாளர் ரத்நாயக்கவை சந்தித்து எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் இந்த வரும் 2025 ஆம் ஆண்டு கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

அதே நேரம் , இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்வரும் மார்ச் மாதம் புனித கடமையான நோன்பை நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள் . எனவே இந்த தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தினால் சிறந்ததெனவும் தெரிவித்தனர்.

SOCIAL REGULATORS அமைப்பினரின் கோரிக்கைகளை



கேட்டறிந்த தேர்தல் ஆணையாளர் ஆணையாளர்கள் குழுவில் சமர்ப்பித்து ஆலோசித்தபின்னர் முடிவெடுப்பதாக அமைப்பினரிடம் உறுதியளித்தார்.

# தர்ம சக்தி அமைப்பு -முஸ்லிம் சமய திணைக்களம் சினேகபூர்வ சந்திப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தர்ம சக்தி அமைப்பின் தலைவர் கலாநிதி மாதம்பஹம அஸ்ஸஜி தேரர் , முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு சினேகபூர்வ சந்திப்பொன்றை (07) நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்டு, திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.





நவாஸை சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இனங்களுக்கிடையிலான சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்துவது தொடர்பான பொறிமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் தர்ம சக்தி அமைப்பும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தும் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் தர்ம சக்தி அமைப்பின் நிறைவேற்று செயலாளர் பாதிரியார் அநுர பெரேரா, உதவிச் செயலாளர் சிவ ஸ்ரீ சிவ தர்சக சர்மா குருக்கள், பொருளாளர் அஷ்ஷெய்க் ஏ.என்.எம். பிர்தௌஸ், நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ரிஸான் ஹுஸைன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்களான சுல்கிப் மௌலானா, அஸாம் லத்தீப் ஆகியோருடன் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹ்மட், வக்ப் நியாய சபை செயலாளர் (பதில்) எம்.என்.எம். ரோஸன், திணைக்கள சகவாழ்வு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றிஸ்மி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சட்டவிரோத கிருமிநாசினி கைப்பற்றல்

( எம்.ரீ.ஆரிப் )

இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் இருந்து சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைநாசினிகளை கல்கிரியா கம புப்போகம பகுதியில் (07) கைப்பற்றியுள்ள தாக வடமத்திய மாகாண விவசாய பிரதி பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது. இதன் பெறுமதி நான்கு மில்லியனுக்கும் அதிகமான பெறுமதி மதிக்கத்தக்கதென அலுவலகம் தெரிவித்துள்ளது. நீண்ட காலமாக உள்ளூர் நிறுவனங்களின் வர்த்தக நாமங்களுடன் போதியிடப்பட்டு கல்கிரியாகம புப்போகம பகுதியில் மிக உயர்ந்த மட்டத்தில் விநியோகம் செய்யப்பட்டு வந்துள்ளது. பேராதனை பூச்சிக்கொல்லி பணியகம் மற்றும் வடமத்திய மாகாணவிவசாய பிரதி பணிப்பாளர் அலுவலக அதிகாரிகளும் இணைந்து குறித்த களஞ்சியசாலையை ஆய்வு செய்த போது கைப்பற்றியுள்ளனர்.

# கற்பிட்டி மஹ்தி பவுண்டேஷனின் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

( எம் எச் எம் சியாஜ் )

கற்பிட்டி பிரதேசத்தில் பல்வேறு சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வரும் மஹ்தி பவுண்டேஷன் கல்வி சார் வேலைத்திட்டத்தின் ஊடாக வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி திட்டத்தின் முதலாவது நிகழ்வு புதுக்குடியிருப்பிலுள்ள ஏ.ஆர்.எம் பங்களாவில் செவ்வாய்க்கிழமை (07) மஹ்தி பவுண்டேஷனின் நிறைவேற்று பணிப்பாளர் ஏ.ஆர்.எம் முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் அதிபரும் மஹ்தி பவுண்டேஷனின் இணைப்புச் செயலாளருமான எஸ்.எம் அருஸ் மற்றும் கற்பிட்டி ஐயூப் பாடசாலையின் ஆசிரியரும் மஹ்தி பவுண்டேஷனின் இணைப்புச் செயலாளருமான எம் நவாஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.


# பத்தாம் கட்டை கிராமத்தில் வீடு புகுந்து தாக்குதல்

( எம் எச் எம் சியாஜ் )

மதுரங்குளி ஸ்ரீமாபுரம் பத்தாம் கட்டை எனும் கிராமத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ள சம்பவமொன்று செவ்வாய்க்கிழமை (07) இரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, மது போதையில் வந்த குழுவினர் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பின்னர், வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கர வண்டியையும் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதன்போது எட்டு வயது சிறுமி ஒருவர் காயம் அடைந்த நிலையில் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் பற்றி கேள்வியுற்ற புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜே. எம். பைஸல் சம்பவ இடத்திற்கு உடன் விஜயம் செய்து தாக்குதல் சம்பவம் பற்றி கேட்டறிந்தார். பின்னர் உடனடியாக மதுரங்குளி பொலிஸாருடன் தொடர்பு கொண்டு



விசாரணை மேற்கொண்டு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்ற குழுவினரை கைது செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுத்தார். மேலும் இக்குழுவினர் இதற்கு முன்பும் இக்கிராம மக்களை இவ்வாறு தாக்கியும் அச்சுறுத்தியும் வந்துள்ளமை பற்றியும் பாராளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் முறையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மனித நடவடிக்கையின் இடைவிடாத ஆக்கிரமிப்பு; நல்லூரில் முதலாவது வருடச்செயற்பாட்டு

இயற்கையின் நிலப்பரப்பில் மனித நடவடிக்கையின் இடைவிடாத ஆக்கிரமிப்பில் இந்த உலகம் நமக்கானது என்று செயற்படுகின்ற அறிவும் விலை உயர்ந்த உயிர் பல்வகைக்கு அச்சுறுத்தலாக அமைகின்றது.

அவ்வகையில் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் பெரும் முயற்சியாகவும் மனித வாழ்வில் இயற்கையோடு இணைந்து வாழுதலின் சவால்களை இல்லாமல் ஆக்குவது என்ற நோக்கில் இந்த வருடத்திற்கானபறவை அவதானிப்பும் உயிர்பல வகை மைக்கற்றுக் கொள்ளும் முதலாவது வருடச்செயற்பாட்டை நல்லூரில் நடத்தியது.

நல்லூர் பிரதேச செயலகம், சி.சி.எச்



நிறுவனம் மற்றும் இயற்கை ஊக்குவிப்பு கழகம் ஆகியன இணைந்து கிழக்கு அரியாலை பகுதியில் பறவைகள் அவதானிப்பு மற்றும் உயிர்பல்வகைமை பயணவழி கற்றல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வு பிரதேச செயலாளர் யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

# கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுங்கள்



(எஸ்.சினீஸ் கான்)

நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய வருமானமாக இருக்கின்ற சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் எந்தவொரு ஏற்பாட்டையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. மிக முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையினை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை விடுத்தார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இக்கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் இனால் விடுக்கப்பட்டது.

தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றுகையில்,

சுற்றுலாத்துறையின் பிரதான இடமாக கிழக்கு மாகாணம் திகழ்கிறது. குறிப்பாக பொத்துவில் பிரதேசத்திலுள்ள அறுகம்பை பிரதேசமானது ஆயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் வருகை தரும் இடமாக காணப்படுகிறது.

ஆனால், இதுவரையில் சுற்றுலா வலயமாக கெசட் செய்யப்படவில்லை, அங்கிருக்கின்ற கடற்கரையை சுத்தம் செய்வதற்கான இயந்திரத்தை கூட சுற்றுலா அமைச்சுக்கோ அல்லது சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைக்கோ உள்ளூராட்சி மன்றத்திற்கோ வழங்கவில்லை .

அது மட்டுமல்லாது சில காரணங்களால் மூன்று மாடிக்கு மேல் ஹோட்டல்கள் அமைப்பதற்கு அனுமதி கூட இல்லாமலுள்ளது. இது போன்ற சிறிய விடயங்களால் அறுகம்பை பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை முன்னேற்றுவதற்கு நிறைய சவால்களை எதிர்நோக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. சம்மந்தப்பட்ட அமைச்சர் இவ்விடயத்தை உடனடியாக கருத்திற் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அதேபோல், மட்டக்களப்பு விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக கெசட் செய்யப்பட்டிருப்பதுடன் கடந்த காலங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இருந்த போதிலும் பயணிகள் முனையம் வசதிகள் போதாமையால் விமானம் நிறுத்துவதற்கும் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்ய முடியாத நிலையும் காணப்படுகிறது.

இதனை சரி செய்ய முடியுமாக இருந்தால் சுற்றுலாப்பயணிகளை திருகோணமலை, பாசிக்குடா, பொலநறுவை, அறுகம்மை பிரதேசங்களுக்கு நேரடியாக அழைத்து வரலாம் என்பதுடன் சுற்றுலாத்துறையினை கிழக்கு மாகாணத்தில் முன்னேற்றுவதோடு நாட்டினுடைய வருமானத்தையும் அதிகரிக்கலாமென்றும் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# அம்பாறையில் அரிசி ஆலைகளில் சோதனை; பதுக்கல்கள் இல்லை!

## அம்பாறை அரச அதிபர் தகவல்

(முகம்மட் முக்தார்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகள், நெற்களஞ்சியங்கள் என்பன பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் கடந்த வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

இப்பரிசோதனையில் அம்பாறை மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் சப்ரகமுவ மாகாண பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை பணிப்பாளர் தாரக விதானகம ஆகியோர் தலைமையில் ஆராய்ச்சி உற்பத்தி குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கை நாட்டில் காணப்படும் அரிசிப் பற்றாக்குறையினால் அம்பாறை மாவட்டத்தில் தற்போது காணப்படும் நிலைமைகளை அவதானித்து பிரச்சினைகளை இனங் காணும் வகையில் இடம் பெற்றதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதன்போது அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர், கல்முனை மற்றும் அக்கறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுகளின் நெல் ஆலை மற்றும் களஞ்சிய சாலைகளில் இப்பரிசோதனைகள் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்டத்தில் அரிசிக்கான தட்டுப்பாடோ, கட்டுப்பாட்டு விலையைவிட அதிகரித்த விலையில் அரிசி விற்பனை இடம் பெற்றதாகவோ, அரிசி, நெல் வகைகள் பதுக்கி வைப்பட்டதாகவோ முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லையென மாவட்ட அரச அதிபர் சிந்தக தெரிவித்தார்.

## 'சதுப்புநிலங்கள், காடுகளை மீளமைத்தல்' தொடர்பான தெளிவூட்டும் செயலமர்வு



(ஏ.எச்.ஹஸ்பர்)

சதுப்புநிலங்கள் மற்றும் ஏனைய காடுகளை மீளமைத்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக கிழக்கு மாகாண அரச அதிகாரிகள் உட்பட முக்கிய பங்குதாரர்களுக்கு தெளிவூட்டும் செயலமர்வு நேற்றுமுன்தினம் (07) திருகோணமலையில் உள்ள தனியார் ஹோட்டலொன்றில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வு PROCLIME நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்ன சேகரவும் கலந்துகொண்டார். மேலும் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன் உட்பட பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பிரதி பணிப்பாளர்கள், துறை சார் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## கேரள கஞ்சா, ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(கே.எ.ஹமீட்)

கேரளக் கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் (07) செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையடிக் கிராமப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, மலையடிக்கிராமம் 02 பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய சந்தேக நபர் கேரள கஞ்சா மற்றும் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 1 கிராம் 385 மில்லிகிராம் கேரள கஞ்சாவும் மற்றும் 1 கிராம் 705 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டன. சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## மேற்பார்வையாளர் காரியாலயம் திறப்பு



அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் சிற்றூழியர்களுக்காக அமைக்கப்பட மேற்பார்வையாளர் காரியாலயமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. வைத்திசாலையின் வைத்தியட்சகர் டொக்டர்.ஐ.எம். ஜவாஹிர் இக்காரியாலயத்தை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் வைத்திய அதிகாரிகளையும் படத்தில் காணலாம். (படம்: அக்கரைப்பற்று நிருபர்)

# குடும்பங்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் திட்டம்

(அக்கரைப்பற்று நிருபர்)

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் கடன் திட்டத்தின் கீழ் அஸ்வெசும மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் வேலைத்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மற்றும் பொது மக்களுக்கு அக்கரைப்பற்று 14 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலில் பிரிவிற்கு பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் யு.எல். பியாஸின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் அக்கரைப்பற்று தலைமைப் பீட சமுர்த்தி முகாமையாளர் எம்.ஜே.எம். நிஹ்மத்துல்லாஹ், திட்டத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர், கருத்திட்ட சமுர்த்தி முகாமையாளர் என்.ரி.மசூர் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு அக்கரைப்பற்று 14 கிராம உத்தியோகத்தர் பிரிவில் செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விளக்கமளித்தார்கள்.



இதன் போது அக்கரைப்பற்று கிழக்கு சமுர்த்தி முகாமையாளர் கே.சத்தியப்பிரியன், பிரிவின் கிராம உத்தியோகத்தர் எ.எல்.நஸ்லி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எம்.றஸ்மி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தேசிய ரீதியில் சாதனை படைத்த அறநெறிப்பாடசாலை மாணவர்கள்



(எஸ்.கார்த்திகேசு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தேசிய ஆக்கத்திறன் போட்டியில் அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து பங்கு கொண்டு தேசிய ரீதியில் சாதனைப் படைத்த அறநெறிப்பாடசாலை மாணவர்கள் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட பிரதேச இந்துசமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த மாதம் 21ஆம் திகதி கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெற்று இருந்த தேசிய விருது வழங்கும் நிகழ்வில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

அந்தவகையில் திருக்கோவில் பிரதேசத்திற்கு 5 விருதுகள் வழங்கப்பட்டன. வெற்றி பெற்ற அறநெறிப் பாடசாலை மாணவர் களை திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் நேரில் சென்று தனது வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்க கலண்டரும் வழங்கி வைக்கப்பட்டு இருந்ததுடன் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளருடன் மாவட்ட இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஜெயராஜ் பிரதேச இந்துசமய கலாசார உத்தியோகத்தர் நிஷாந்தினி தேவராஜ் மற்றும் மத்திய மாகாண கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

## முன்பள்ளியின் 8வது விடுகை விழா




கிட்ஸ் கார்டன் முன்பள்ளியின் 8வது விடுகை விழா கல்குடா மீராவோடை அமீர் அலி மண்டபத்தில் அஸ்பேக் அகடமி பணிப்பாளர் ஏஎல்.எம் இர்பான் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற முன்னாள் அதிபரும், சிராஜ் அரபுக் கல்லூரியின் கல்விப் பிரிவின் பொறுப்பாளருமான நைனா முஹம்மதும், விசேட அதிதிகளாக என்.எம்.எம். யாசீர் அரபாத் எம்.எம். ஹக்கீம் ஆசிரியர் உட்பட பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## காட்டு வேளாண்மையின் தாக்கம் அதிகரிப்பு

(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற் குட்பட்டு செய்கை பண்ணப்பட்டுள்ள வேளாண்மைச் செய்கையில் காட்டு வேளாண்மையின் தாக்கம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வயலில் வேளாண்மையைப் போன்றே வளரும் குறித்த காட்டு வேளாண்மையை அகற்றுவதற்கு விவசாயிகள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனை அகற்றுவதில் சில விவசாயிகள் நாட்டம் செலுத்தாத நிலை காணப்படுவதாகவும் அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு காட்டு வேளாண்மையின் தாக்கம் அதிகரிப்பால் எதிர்பார்த்த விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது.

## மருதமுனை ஜமீல் எழுதிய 'காலம் ஒரு வேட்டை விலங்கு' நூல் வெளியீட்டு விழா

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனையை சேர்ந்த ஏ.ஆர். அப்துல் ஜமீல் எழுதிய 'காலம் ஒரு வேட்டை விலங்கு' கவிதை தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மர்ஹூம் அப்துல் றஸாக் சேர் நினைவரங்கில் புதுப் புனைவு பதிப்பகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த வெளியீட்டு விழா நிகழ்வு, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி பிர்தௌஸ் சத்தார் தலைமையில் ஓய்வு நிலை பதிவாளர் கவிஞர் மன்சூர் ஏ. காதர் முன்னிலை அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

ஊவா வெல்லச பல்கலைக் கழகத்தின் பதிவாளர் எம்.எம்.ஹிபத்துல் கரீம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எம். நுபைல், கிழக்கு பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எம். எப். மர்சூக் , தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எம்.பைறோஸ், ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் இலங்கை நிர்வாக சேவையின் முதல் தர அதிகாரி கவிஞர் எம்.எம்.நௌபல், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த வெளியீட்டு விழா நிகழ்வின் முதன்மை பிரதிகளை மருதமுனை ஜாஹி வீவர்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.ஐ. உபைதுர் ரஹ்மான், அல்-மனார் மத்திய கல்லூரியின் உதவி அதிபர் எம்.எஸ். நிகால், திடீர் மரண விசாரணை அதிகாரி பி.பஹுட் ஸமான், மெரீடியன் கபே உரிமையாளர் எம்.எச். எம்.நியாஸ் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். ட.மர்ஹூம் அப்துல் றஸாக் சேர் நினைவு பிரதி ஏ.ஆர்.ஹிபத்துல்லாஹ் பெற்றுக் கொள்வார். நூல் மீதான வாசிப்பை தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர், எழுத்தாளர் அப்துல் றஸாக், கவிஞர் ஜிப்ரி ஹாசன், கவிஞர் டீன் கபூர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை விடுவிக்கக் கையெழுத்து போராட்டம்



(சண்முகம் தவசீலன்)

விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியை இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்று (08) முன்னெடுக்கப்பட்டது

மாவீரர் தினத்தில் தமது பிள்ளைகளுக்கான நினைவேந்தலைச் சுதந்திரமாக அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் கோருகின்றனர்.

தேராவில் மாவீரர் துயிலுமில்ல பணிக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் என அனைவரும் இணைந்து குறித்த கையெழுத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தின் காணியின் பெரும் பகுதி இராணுவத்தினரால் அபகரிக் கப்பட்டிருக்கின்ற நிலையில் அந்த துயிலுமில்ல காணிக்கு முன்பாக குறித்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**ஒட்டுசுட்டானில்**

## துப்பாக்கிச் சூடு; ஒருவர் படுகாயம்

(அந்தணன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட கூழா முறிப்பு கிராமத்தில் நேற்று சட்ட விரோத இடியன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளார்.

கூழாமுறிப்பு கிராமத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான குடும்பஸ்தருக்கும் அவரின் குடும்ப சகோதரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கத்திக்குத்தும் இதன்போது இடம்பெற்றுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் மீது வீட்டில் வைத்திருந்த இடியன் துப்பாக்கியால் எதிராளி சுட்டதில் 40 வயதுடைய குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் முல் லைத்தீவு மாவட்ட வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டினை நடத்தி யவர் தப்பிச் சென்ற நிலையில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபரிடம் இருந்து மாவட்ட மருத்துவ மனை பொலிசார் முறைப்பாட் டினை முன்னெடுத்து வருகின்றார் கள்.

மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிசார் மேற் கொண்டு வருகின்றார்கள்.

**ஹற்றனில்**

## சாரதி மீது தாக்குதல்: நால்வர் கைது

ஹற்றனில் இருந்து மஸ்கெ லியா– சாமிமலை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸின் குறுக்கே சென்று பஸ்ஸின் சாரதி யைத்தாக்கிய நான்கு இளை ஞர்கள் சந்தேகத்தின் பேரில் நேற்று முன்தினம் (07) பிற்பகல் கைது செய்யப்பட்டதாக நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இரண்டு முச்சக்கரவண்டிகள் மற்றும் இரண்டு மோட்டார் சைக்களில் வந்த குழுவொன்று (07) மாலை 5 மணியளவில் ஹற்றன் – நோர்வூட் பிரதான வீதியில் நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பஸ்ஸைப் பின்தொடர்ந்து முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்து பஸ்ஸைக் கடந்து சென்று வீதியின் குறுக்கே நிறுத்தி, சாரதியின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த முச்சக்கரவண்டி தனியார் பஸ்ஸுடன், திங்கட்கிழமை (06) மோதியதற்கே பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர் .

முச்சக்கர வண்டியுடன் நான்கு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மற்றுமொரு சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதாகவும், சந்தேக நபரைக் கைது செய்வ தற்கான நடவடிக்கை ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்கு உள்ளான சாரதி டிக்கோயா–கிளங்கன் வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20–25 வயதுடைய ஹற்றன் டிக்கோயாவை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவர், சந்தேக நபர்கள் சாரதியை தாக்கும் வீடியோவை கையடக்கத் தொலைப்பேசியில் பதிவு செய்துள்ளதுடன், சந்தேக நபர்கள் அந்த வீடியோவை பதிவு செய்ய வேண்டாம் எனக் குறித்த நபரையும் அச்சுறுத்தியுள்ளனர்.

# முல்லைத்தீவுக் காட்டில் மரை வேட்டை; ஒருவர் கைது



(பு.கஜிந்தன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு காட்டினுள் அத்துமீறி உள்நுழைந்து பாரிய மரை ஒன்றினை வெடி வைத்து இறைச்சியாக்கிக் கொண்டிருந்த ஒருவரைப் புதுக்குடியிருப்பு வனவள பாதுகாப்பு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவ ருவதாவது,

நேற்று முன்தினம் புதுக்குடியி ருப்பு மண்ணகண்டல் ஒதுக்க காட்டினுள் அத்துமீறி உள் நுழைந்து கட்டு துவக்கால் உயிரினங்களை அச்சுறுத்தி மரை ஒன்றினை வெடி வைத்து இறைச்சியாக்கும்போது புதுக்குடியிருப்பு பகுதி வன அதிகாரி தலைமையின் கீழ், விசேட அதிரடிப்படையினர் மற்றும் திணைக்களத்தினரால் சுற்றி வளைப்பு நடவடிக்கை ஒன்று முன்னெ டுக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தினை சேர்ந்த இளைஞர் இதன்போது கைது செய்யப்பட்டதோடு மரை இறைச்சியும், மரையைச் சுடுவதற்குப் பயன்படுத்திய கட்டுத் துவக்கும் கைப்பற்றப்பட்டது.

தொடர்ந்து மேலதிக நடவடிக்கை களுக்காக வன ஜீவராசிகள் திணைக்களத்திடம் சந்தேக நபர் ஒப்படைக்கப்பட்டார்.

இந்நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் முல்லைத் தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசார ணைகளை திணைக் களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஒருவன் செய்தியால் பலன்



(பு.கஜிந்தன்)

அராலி துறைக்குச் செல்லும் வீதியில் காணப்பட்ட பாரிய குழியை வீதி அபிவிருத்தி அதி கார சபை முட நடவடிக்கை எடுத் துள்ளது.

நேற்று புதன்கிழமை (08) ஒருவன் தேசிய பத்திரிகையில் குறித்த குறைபாட்டுடனான செய்தி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இச் செய்தி குறித்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் விரைந்து செயற்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை யினர் குறித்த குழியை நிரப்பி சீர் செய்து, பாதுகாப்பான பயணத்தை உறுதிப்படுத்தினர்.

இவ்வாறு விரைந்து நடவடிக்கை எடுத்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மக்கள் தமது பாராட்டைத் தெரிவித்து வருகின்றனர்.

## வெளிநாட்டு முதலீடுகளை உள்ளீர்த்தல்; அமைச்சர் - யாழ்.எம்.பிக்கள் சந்திப்பு



(பு.கஜிந்தன்)

வெளிநாட்டில் வாழுகின்ற தமிழர்கள் வடக்கில் முதலீடு செய்வது தொடர்பாக தமது ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.


இது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, வைத்தியர் பவானந்தராஜா ஆகியோர் வெளிநாட்டு விவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் கலந்துரையாடல் ஒன்றை நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடத்தினர்.

இதன்போது வடக்கு மாகாணத்தில் ஐந்து தொழிற்பேட்டை நிலையங்களை அமைப்பதற்காகக் காணிகள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் விரைவில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆர்வமுள்ளவர்கள் இலங்கை முதலீட்டுச் சபையின் ஊடாக தங்கள் செயல்திட்டங்களை முன்வைக்க முடியும் எனவும் பதிலளித்தார்.

அதே போன்று நீண்ட காலமாகப் புலம்பெயர்ந்து நாட்டுக்கு வர முடியாது இருக்கும் தமிழர்கள் தங்கள் நாட்டுக்கு வர விரும்புவது தொடர்பான ஆர்வத்தை நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் அமைச்சருக்குத் தெரியப்படுத்தினார்.

## UNFPA நிறுவனத்தினர் யாழில் கலந்துரையாடல்



(பு.கஜிந்தன்)

UNFPA நிறுவனத்தின் செயற்றிட்டத்தினை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி)க.ஸ்ரீமோகனன் தலைமையில் நேற்று முன்தினம் (07) மாவட்டச் செயலக அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடை பெற்றது.

இத் திட்டத்தின் மூலம் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான வலுவூட்டல் செயற்றிட்டத்தினை பரீட்சார்த் தமாக இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளில் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தாசினி, அரச சார்பற்ற நிறுவனங்கள் மாவட்ட இணைப்பாளர் ந. தயாபரன், UNFPA நிறுவனத் திட்ட ஆய்வாளர் திருமதி யசாரா நதானியேல் மற்றும் திட்ட உத்தியோகத்தர் பங்குபற்றினர்.

## வில்பத்து தேசிய பூங்கா பகுதியில் 11 டொல்பின்கள் கரையொதுங்கல்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

வில்பத்து தேசிய பூங்கா கடல் எல்லைக்குட்பட்ட கொல்லன் கனத்த பகுதியில் 11 சாதாரண குப்பி டொல்பின்கள் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் (7) கரையொதுங்கியுள்ளது.

முள்ளிக்குளம் தள பாதுகாப்பு அலுவலகத்திற்குக் கிடைத்த தகவலுக்கு அமைய அப்பகுதிக்குச் சென்ற வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் சோதனை செய்துள்ளனர்.

இதன் போது டொல் பின்கள் குழு ஒன்று இறந்து கிடந்ததை அவதானித்துள்ளனர்.

பின்னர் இறந்த டொல்பின்களை மீட்டுப் பரிசோதித்ததன் பின்னர் இது தொடர்பான தகவல்கள் புத்தளம் நீதிவான் நீதிமன்றில் (7) சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி அநுராதபுரம் வன விலங்கு கால்நடை வைத்திய அலுவலக அதிகாரிகள் உயிரிழந்த டொல்பின்களின் மரணம் தொடர்பான பிரேதப் பரிசோதனையை மேற்கொண்டனர். இதன் போது வலையில் சிக்கியதால் அவை இறந்ததாக மருத்துவர்கள் ஊகிக்கின்றனர்.

மேலும் அவற்றின் மரணத்தை உறுதிப்படுத்துவதற்காக விலங்கு களிடமிருந்து எடுக்கப்பட்ட மாதிரி கள் பேராதனை கால் நடை மருத் துவ பீடத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது எனத் தெரியவருகிறது.





கொட்டாகலைத் தமிழ் மகா வித்தியாலயத்தில் கிளீன் ஸ்ரீ லங்கா (Clean Sri Lanka)" தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து கடமைகளை ஆரம்பித்தல் நிகழ்வு திங்கட்கிழமை (06) கொட்டாகலைத் தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி எஸ்.கமலதர்ஷினி தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

படங்கள் : கொட்டகலை நிருபர்

## மணற்காடு கடற்பகுதியில் கரையொதுங்கிய மிதவை

வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்பகுதியில் மிதவை ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் குறித்த மிதவை கடலில் மிதந்துவருவதை அவதானித்துள்ளனர்.

சிவப்பு நிறமுடைய கூம்பு வடிவிலான மிதவை ஒன்று கரையொதுங்கி இருப்பதாக அப்பகுதி மீனவர்கள் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

குறித்த மிதவையை அதிகளவான மக்கள் பார்வையிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.



# ஷேக் ஹசீனாவின் விசா காலம் நீடிப்பு



பங்களாதேஷிலிருந்து தப்பி வந்த அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை, நாடு கடத்துமாறு பங்களாதேஷினால் வலியுறுத்தப்படும் நிலையில், அவரது விசா காலத்தை இந்தியா நீட்டித்துள்ளது.

கடந்த ஆண்டு ஜுலை மாதம், பங்களாதேஷில் ஏற்பட்ட வன்முறை மற்றும் கலவரத்தின்போது, பலர் கொலை செய்யப்பட்டனர். ஏராளமானோர் காணாமல் போன நிலையில் வன்முறை காரணமாக, பங்களாதேஷிலிருந்து வெளியேறிய ஷேக் ஹசீனா மற்றும் 96 பேரின் கடவுச்சீட்டை இரத்து செய்ததாக பங்களாதேஷ் இடைக்கால அரச செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தது.

இந்த அறிவிப்பு வெளியாகி ஒரு நாளுக்குப் பிறகு, ஷேக் ஹசீனாவின் விசாவை நீட்டித்துள்ளதாக மத்திய அரசு நேற்று தெரிவித்துள்ளது.

பங்களாதேஷிலிருந்து வெளியேறிய ஷேக் ஹசீனா, கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இந்த நிலையில், பங்களாதேஷில் நடந்த படுகொலைகள் தொடர்பான வழக்கில் ஷேக் ஹசீனா மற்றும் முன்னாள் அமைச்சர்கள், அரச ஆலோசகர்கள், இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் கைது ஆணை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டில்லி உயர்நீதிமன்ற நீதிபதியாக

# தமிழர் பதவியேற்பு

டில்லி உயர்நீதிமன்ற நீதிபதிகளாக அஜய் திக்பால் மற்றும் ஹரிஷ் வைத்தியநாதன் சங்கர் என்ற தமிழரும் பதவியேற்றுக் கொண்டனர். இவர்களுக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி விபு பாக்ரூ பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் டில்லி உயர்நீதிமன்ற நீதிபதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நீதிபதியாக பதவியேற்ற அஜய் திக்பால் சுமார் 31 வருடங்களாக சட்டத்தரணியாக பலவிதமான வழக்குகளில் பணியாற்றியுள்ளார். 51 வயதை எட்டும் நீதிபதி ஹரிஷ் வைத்தியநாதன் சங்கரின் பூர்வீகம் தமிழகத்தின் பொள்ளாச்சி. ஏற்கனவே பொள்ளாச்சியைச் சேர்ந்த நீதிபதி கே.வி.விஸ்வநாதன் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. சட்டப்படிப்பை டில்லியில் முடித்த ஹரிஷ் இங்கிலாந்தின் வார்விக் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை முடித்தார். உச்ச நீதிமன்றம் உட்பட நாட்டின் பல உயர்நீதிமன்றங்களில் பல வழக்குகளுக்காக வாதிட்டுள்ளார். நாட்டின் பிரபல சட்டத்தரணிகளான சோலி சொரப்ஜி, கே.கே.வேணுகோபால், சி.எஸ்.வைத்தியநாதன் உட்பட பலருடன் பணிபுரிந்துள்ளார். நீதிபதியாக பதவி யேற்பதற்கு முன்பாக மத்திய அரசின் சட்டத்தரணியாக பணியாற்றியுள்ளார். அயோத்தியா வழக்கு, கோத்ரா கலவரம், இராணுவம் மற்றும் கடற்படை தொடர்பான வழக்குகள், அமைச்சர்களின் பதவி பறிப்பு என எண்ணற்ற வழக்குக ளில் பணியாற்றியுள்ளார். இவர் பிரபல உச்சநீதிமன்ற உயர் நீதிபதி சி.எஸ். வைத்தியநாதனின் மகன். நீதிபதி ஹரிஷிற்கு தமிழ் மட்டுமல்லாமல் மலையாளம், ஹிந்தி எழுத படிக்க நன்றாக தெரியும் என்பதும் குறிப்பிடத் தக்கது.



# பஞ்சாப்பில் 44 நாட்களாக விவசாய தலைவர் உண்ணாவிரதம்

## நாடு முழுவதும் ட்ராக்டர் பேரணி அறிவிப்பு



விவசாய தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால் 44 நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். உடல்நிலை மோசமடைந்துள்ள போதிலும் பஞ்சாப் அரசு வழங்கும் மருத்துவ உதவியையும் அவர் மறுத்துவிட்டார். பஞ்சாப்-ஹரியானா எல்லையில் போராட்டம் நடத்தும் விவசாயிகள், ஜனவரி 26 குடியரசு தினத்தன்று நாடு முழுவதும் ட்ராக்டர் அணிவகுப்பை அறிவித்துள்ளனர்.

44 ஆவது நாளாக விவசாய தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் இந்த பேரணி போராட்டம் அறிவிக்கப்பட்டது. பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை சட்டப்பூர்வமான உத்தரவாதம் உள்ளிட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்க வலியுறுத்தி பஞ்சாப் மற்றும் ஹரியானா எல்லைகளுக்கு இடையே விவசாயிகள் கடந்த பெப்ரவரி முதல் போராட்டம் நடத்தி வருகின்றனர். சம்யுக்த கிசான் மோர்ச்சா மற்றும் கிசான் மஸ்தூர் மோர்ச்சா தலைமையில் விவசாயிகள் டில்லி நோக்கி பலமுறை செல்ல முயன்றனர். ஆனால் கண்ணீர் புகைகுண்டுகளை வீசியும், தண்ணீரை பாய்ச்சி அடித்தும் பொலிஸார் அவர்களை விரட்டியடித்தனர். எனவே பஞ்சாப் மற்றும் ஹரியானா இடையேயான ஷம்பு மற்றும் கானௌரி எல்லைப் புள்ளிகளில் முகாமிட்டுள்ளனர். விவசாய தலைவர் ஜக்ஜித் சிங் தலேவால் (70 வயது), நவம்பர் 26 முதல் பஞ்சாப் மற்றும் ஹரியானா இடையேயான கானௌரி எல்லைப் பகுதியில் காலவரையற்ற உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளார். உடல்நிலை மோசமடைந்துள்ள போதிலும் பஞ்சாப் அரசு வழங்கும் மருத்துவ உதவியையும் அவர் மறுத்துவிட்டார். இந்த நிலையில்தான் விவசாயிகள் குடியரசு தினத்தன்று நாடு முழுவதும் ட்ராக்டர் பேரணியை அறிவித்துள்ளனர்.

முன்னதாக கடந்த 2021 செப்டம்பரில் மத்திய அரசு இயற்றிய மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் வீதிகளை மறித்து பல போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தியாவின் பொருளாதாரத்தை நவீனமயமாக்க இந்த சட்டங்கள் அவசியம் என்று அரசு தெரிவித்தாலும், இந்த சீர்திருத்தங்கள் பெரிய நிறுவனங்களின் தயவில் இருக்கும்படி விவசாயிகள் தள்ளப்படுவதாக கூறி அவர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். அவர்களின் ஒரு வருட போராட்டத்தின் பலனாக நவம்பர் 2021 இல் விவசாய சட்டங்கள் திரும்பப்பெறப்பட்டன. 2021 குடியரசு தினத்தை ஒட்டியும் செங்கோட்டையை முற்றுகையிட விவசாயிகள் ட்ராக்டர் பேரணி நடத்தினர். அப்போது பொலிஸ் உடனான மோதலில் வன்முறை வெடித்தமை குறிப்பிடத்தக்கது.




# இஸ்ரோவின் புதிய தலைவராக வி.நாராயணன் நியமனம்



இந்திய விண்வெளி ஆய்வு மையம் எனப்படும் இஸ்ரோ பெங்களூரை தலைமையிடமாக கொண்டு செயற்படுகின்றது. விண்வெளித்துறையில் அமெரிக்கா, ரஷ்யாவிற்கு சவால் அளிக்கும் வகையில் பல்வேறு சாதனைகளை இந்திய விண்வெளி ஆய்வு மையம் செய்து வருகிறது.

இஸ்ரோவின் தற்போதைய தலைவராக சோம்நாத் பதவி வகிக்கும் நிலையில் இவரது பதவிக்காலம் அடுத்த வாரத்துடன் முடிவடையவுள்ளது. இதனையடுத்து புதிய தலைவராக வி. நாராயணனை மத்திய அரசின் நியமனக்குழு தேர்வு செய்துள்ளதுடன் வருகின்ற 14ஆம் திகதி இஸ்ரோவின் தலைவராக பொறுப்பேற்கவுள்ளார். தமிழகத்தின் குமரி மாவட்டத்தை சேர்ந்த இவர் இஸ்ரோவில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளதுடன் இஸ்ரோவின் Liquid Propulsion Systems மையத்தின் இயக்குநராக வி.நாராயணன் தற்போது பதவி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சபரிமலை பக்தர்களுக்கான கானக பாதை அனுமதி நேரம் குறைப்பு



புல்லுமேடு கானகப் பாதையில் சபரிமலை செல்லும் பக்தர்களுக்கான அனுமதி நேரம், காலை 7.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை என ஒருமணி நேரத்தை குறைத்து இடுக்கி மாவட்ட நிர்வாகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சபரிமலை மகரவிளக்கு பூஜை மகோற்சவத்தை முன்னிட்டு, சத்திரத்தில் இருந்து புல்லுமேடு கானகப் பாதையில் பயணிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால், தாமதமான பயணம் காரணமாக பக்தர்களுக்கு பாதுகாப்புச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து நுழைவு நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இடுக்கி மாவட்ட அதிகாரி விக்னேஷ்வரி உத்தரவுப்படி தேவசம்போர்டு சார்பில் சபரிமலையில் உயர்மட்டக் குழு கூட்டம் நடந்தது. தேக்கடி பெரியார் புலிகள் காப்பக மேற்குப் பிரிவு இணை இயக்குநர் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, காலை 7 மணி முதல் மதியம் 1 மணி வரை சத்திரத்தில் இருந்து பக்தர்கள் புல்லுமேடு வழியாக சபரிமலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், புல்லுமேடு வழி சபரிமலை கானகப் பாதை வழி பயணம் ஒரு மணி நேரம் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நேரம் குறைப்பு நேற்று (08) முதல் அமுலுக்கு வரும் என தேவசம்போர்டு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அசாம் சுரங்கத்தில் ஒரு தொழிலாளியின் உடல் மீட்பு

அசாமின் திமா ஹசாவ் மாவட்டத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கிய ஒன்பது தொழிலாளர்களில் ஒருவரின் உடல் புதன்கிழமை (08) இராணுவ வீரர்களால் மீட்கப்பட்டது. மீட்பு பணிகள் மூன்றாவது நாளாக இன்றும் தொடர்வதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்பு பணிகளை இராணுவம், கடற்படை, தேசிய பேரிடர் மீட்புப் படை (NDRF) மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படை (SDRF) அடங்கிய குழுவினர் தீவிரப்படுத்தியுள்ளன. எனினும், சுரங்கத்தில் சிக்கிய எஞ்சியுள்ள எட்டு தொழிலாளர்களும் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக தோன்றுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கத் தொழிலாளர்களை மீட்பதற்காக நீர்மூழ்கிக் குழுவினர் நிலக்கரிச் சுரங்கத்தில் வெள்ளம் சூழ்ந்த குழிக்குள் கப்பி மூலம் நுழைந்து தேடுதல் பணிகளை முன்னெடுத்தனர்.

இதன்போதே புதன்கிழமை அதிகாலை ஒரு தொழிலாளரின் உடலானது கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், தொழிலாளரின் அடையாளம் இன்னும் உறுதிபடுத் தப்படவில்லை.

# மர்ம நபர்களால் தூக்கி வீசப்பட்ட 20 நாய்கள் பலி

தெலுங்கானாவில் 31 நாய்களை மர்ம நபர்கள் பாலத்தில் இருந்து கீழே வீசிய கொடூரம் நடைபெற்றுள்ளது. தெலுங்கானா மாநிலம் சங்க ரெட்டி மாவட்டத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் பாலத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டதில் 20 நாய்கள் இறந்ததாகவும், 11 நாய்கள் காயமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

எட்டுமைலாரம் கிராமம் அருகே உள்ள பாலத்தில் இருந்து நாய்கள் வீசப்பட்டதாக விலங்குகள் நல அமைப்பினர் புகார் அளித்தனர். வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக இந்திரகரன் காவல்நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாய்களை வேறு எங்காவது கொன்று பாலத்தில் இருந்து வீசப்பட்டதா என்பது குறித்தும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இறந்த 20 நாய்களுக்கும் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. மேலும் விலங்குகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டதா என்பதை தீர்மானிக்க தடய அறிவியல் ஆய்வகத்திற்கு (எஃப்எஸ்எல்) மாதிரிகள் அனுப்பப்பட்டுள் ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மதுரையில் பேரணி; 5000 பேர் மீது வழக்கு

மதுரை டங்ஸ்டன் எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்டவர்களில் 5000 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை மேலூர் அருகே அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் திட்டத்தை கைவிடக் கோரியும், மேலூர் முல்லை பெரியாறு ஒருபோக பாசன பகுதி பாதுகாக்கப்பட்டவும் வேளாண் மண்டலமாக மாற்றவும் வலியுறுத்தி பொதுமக்கள், விவசாயிகள் போராடி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, மேலூர் முல்லை பெரியாறு ஒருபோக பாசன விவசாயிகள், கிராம மக்கள், வியாபாரிகள் உள்ளிட்டோர் செவ்வாய்க்கிழமை (07) பேரணி சென்றனர்.

ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட பேரணியானது மேலூரில் இருந்து மதுரை தமுக்கம் தபால் நிலையம் வரை நடைபெற்றது. பேரணியின் போது, சுங்கத்திணைக்களம் அருகே பொலிஸாருக்கும், மக்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட போராட்டக்காரர்கள் மறியலில் ஈடுபட்டனர். பேரணியின் எதிரொலியாக, மதுரை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் 5 மணி நேரத்துக்கும் மேலாக போக்குவரத்து முடங்கியது. இந்நிலையில், கட்டுப்பாடுகளை மீறி பேரணி சென்றதாக போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். கிட்டத்தட்ட 5000 விவசாயிகள், பெண்கள் உள்ளிட்டோர் மீது பொலிஸார் 2 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளனர். பேரணியின் போது வாக்குவாதத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்பதை வீடியோ காட்சிகள் மூலம் அடையாளம் காணும் பணியில் பொலிஸார் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கலி:போர்னியாவில் காட்டுத்தீ 3000 பேரை வெளியேற்ற நடவடிக்கை




பா. கிருஷிகா

கலிபோர்னியாவில் 13,000 இற்கும் மேற்பட்ட குடியிருப்பு மற்றும் கட்டிடங்களை அச்சுறுத்திய கடுமையான காட்டுத் தீ காரணமாக லொஸ் ஏஞ்சல்ஸ் குடியிருப்பாளர்கள் சுமார் 30,000 பேரை வெளியேற்ற செவ்வாய்க்கிழமை (08) உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடற்கரை நகரங்களான சாண்டா மோனிகா மற்றும் மலிபு ஆகியவற்றுக்கு இடையே பசுபிக் பாலிசேட்ஸ் பகுதியில் குறைந்தது 2,921 ஏக்கர் (1,182 ஹெக்டேர்) தீக்கிரையாகியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். நீட்டிக்கப்பட்ட வறண்ட காலநிலையைத் தொடர்ந்து வலுப்பெற்றுள்ள பலத்த காற்றானது தீப்பரவலை மேலும் அதிகரிக்கலாம் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே தீப்பரவலை கட்டுப்படுத்தும் முயற்சியில் விமானப் படை வீரர்களும், தீயணைப்பு வீரர்களும் ஈடுபட்டு வருகின்றனர். காயங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என கூறிய கலிபோர்னியாவின் ஆளுநர் கவின் நியூசோம், எனினும் பல கட்டிடங்கள் ஏற்கனவே தீக்கிரையாகிவிட்டதாக குறிப்பிட்டர். அதேநேரம், அரை மில்லியன் மக்கள் மின் வெட்டு பாதிப்பினை எதிர்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல மாதங்களாக கணிசமான மழை பெய்யாத மலைப்பாங்கான பகுதிகளில் மணிக்கு 100 மைல் (மணிக்கு 160 கி.மீ.) வேகத்தில் வீசும் சூறாவளி காற்று பல நாட்களுக்கு நீடிக்கும் என்று வானிலை முன்னறிவிப்பாளர்கள் கணித்துள்ளனர்.

இதனிடையே பசுபிக் பாலிசேட்ஸ் பகுதியில் வீடுகள் தீப்பிடித்து எரிவதையும், குடியிருப்பாளர்கள் தீயில் இருந்து தப்பிக்க தங்கள் செல்லப் பிராணிகளுடன் வெளியேறும் காட்சிகளும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.




# கனடாவை கைப்பற்ற பொருளாதார அழுத்தம்

## ஒருங்கிணைந்த வரைபடத்தை வெளியிட்ட ட்ரம்ப்





கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இணைக்க முனைப்பு காட்டி வரும் ட்ரம்ப், அமெரிக்கக் கொடியால் வரையப்பட்ட இரு நாடுகளின் ஒருங்கிணைந்த வரைபடத்தையும் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக வரும் ஜனவரி 20 ஆம் திகதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்க உள்ளார். கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இணைக்க முனைப்பு காட்டி வரும் ட்ரம்ப் அதற்காக அந்நாட்டின் மீது பொருளாதார அழுத்தத்தை கொடுப்பேன் என அச்சுறுத்தியுள்ளார். அத்துடன் அமெரிக்கக் கொடியால் வரையப்பட்ட இரு நாடுகளின் ஒருங்கிணைந்த வரைபடத்தையும் சமூக வலைத்தளத்தில் அவர் பகிர்ந்துள்ளார். ட்ரம்ப், புளோரிடா மார்-ஏ லாகோ தோட்டத்தில் ஊடகவியலாளர் சந்திப்பின் போது கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க "பொருளாதார சக்தியை" பயன்படுத்துவேன் என தெரிவித்தார். பனாமா கால்வாய் மற்றும் கிறீன்லாந்து இரண்டும் அமெரிக்காவுடன் இருக்க வேண்டிய பகுதிகள். அவற்றை கைப்பற்ற படைகளை கூட அனுப்புவேன். தேவைப்பட்டால் மொத்த இராணுவத்தை கூட அனுப்புவேன். அதேபோல் கனடாவுக்கு பொருளாதார அழுத்தம் தருவேன். மெக்சிகோவும் அமெரிக்காவின் அங்கமாக இருக்க வேண்டும். செஸ் விளையாடுவது போலத்தான். இவர்களுக்கும் பொருளாதார தடை உள்ளிட்ட அழுத்தங்களை கொடுப்பேன் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் இதற்கு பதிலடி கொடுத்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வாய்ப்பில்லை என தனது எக்ஸ் சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கனடா பிரதமராக கடந்த 9 ஆண்டுகள் பதவி வகித்து வந்த ஜஸ்டின் ட்ரூடோ புதிய லிபரல் கட்சித் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் போது தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்யப்போவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்றரை இலட்சம் அரச ஊழியர்களை நீக்க முடிவு பாகிஸ்தான் அதிரடி



பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி நிலவி வருவதால் ஒன்றரை இலட்சம் அரச ஊழியர்களை நீக்க அரசு முடிவு செய்துள்ளதாக பாகிஸ்தான் நிதி அமைச்சர் தெரிவித்தார். பாகிஸ்தான் கடந்த சில ஆண்டுகளாகவே கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதன் காரணமாக அங்கு அத்தியாவசிய பொருட்களின் விலை அளவுக்கதிகமாக உயர்ந்துள்ளது. செலவுகளை குறைக்க பாகிஸ்தான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கான ஒரு முயற்சியாக சர்வதேச நாணய நிதியத்திடம் பெரும் தொகையை கடனாக பெற பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்தது. அதனை ஏற்று பாகிஸ்தானுக்கு கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புதல் அளித்துள்ளது. அதே சமயம் கடனை வழங்க பாகிஸ்தான் அரசுக்கு பல்வேறு நிபந்தனைகளையும் விதித்தது. அதில் முதன்மையானது பாகிஸ்தான் அரசு தனது செலவுகளை குறைக்க வேண்டும் என்பதாகும். எனவே செலவுகளை குறைக்க பாகிஸ்தான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த நிலையில் இஸ்லாமாபாத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்த பாகிஸ்தான் நிதி அமைச்சர் முகமது அவுரங்கசிப் "அரச துறைகளின் எண்ணிக்கையை பாதியாக குறைத்து, ஒன்றரை இலட்சம் அரச ஊழியர்களை நீக்க அரசு முடிவு செய்திருக்கிறது" என தெரிவித்தார்.

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலா பயணிகளுக்கு தடை

## சீனா உத்தரவு

எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாம் அமைந்திருக்கும் திங்ரி பகுதியில் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலா பயணிகளுக்கு தடை விதித்து சீன அரசு உத்தரவிட்டுள்ளது. சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில், நேபாள எல்லையையொட்டி 6.8 ரிக்டர் அளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் காரணமாக உலகின் மிக உயரமான சிகரமாக விளங்கும் எவரெஸ்ட் சிகரத்தின் அடித்தள முகாம் அமைந்திருக்கும் திங்ரி பகுதியிலும் நிலஅதிர்வு ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் திங்ரி முகாமில் இருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் ஆகியோருக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும், அனைவரும் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே சமயம், திங்ரியில் அமைந்துள்ள சீன அறிவியல் அகடமியின் வளிமண்டல மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிலையத்தில் நிலநடுக்கத்தால் சிறிது நேரம் மின்தடை ஏற்பட்டதாகவும், அதுதவிர வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில், நிலநடுக்கத்தை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எவரெஸ்ட் சிகரத்தில் ஏற சுற்றுலா பயணிகளுக்கு தடை விதித்து சீன அரசு உத்தரவிட்டுள்ளது.



# இரு குடும்பங்கள் ஆறு சோடிகள்:

## ஒரே நாளில் திருமணம்

பாகிஸ்தானில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 6 சகோதரர்கள் இன்னொரு குடும்பத்தில் உள்ள 6 சகோதரிகளை ஒரே நேரத்தில் திருமணம் செய்துள்ளது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

பஞ்சாப் மாகாணத்தில் வரதட்சணை வாங்காமல் மிக எளிமையான முறையில் இந்த திருமணங்கள் நடைபெற்றன. அவர்களது கடைசி தம்பிக்கு 18 வயது வரும் வரை காத்திருந்து 6 சகோதரர்களும் ஒரே நேரத்தில் திருமணம் செய்துள்ளனர். இந்த திருமணத்தில் 100 இற்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர். திருமணம் தொடர்பாக மூத்த சகோதரர், "நாங்கள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க விரும்பினோம். பல சந்தர்ப்பங்களில், திருமணச் செலவுகளுக்காக மக்கள் தங்கள் நிலத்தை விற்கிறார்கள். திருமணங்கள் எளிமையாகவும் தேவையற்ற செலவுகள் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதே எங்கள் குறிக்கோளாக இருந்தது" என தெரிவித்தார்.



# அமெரிக்காவில் பகவத்கீதை மீது சத்தியப் பிரமாணம்



அமெரிக்க நாடாளுமன்ற பதவி பிரமாண நிகழ்வின் போது பகவத் கீதை மீது சத்தியப் பிரமாணம் எடுத்த முதல் இந்திய – அமெரிக்க பிரதிநிதி என்ற பெருமையை சுஹாஷ் சுப்ரமணியம் பெற்றுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடந்த நவம்பர் 5ஆம் திகதி நடைபெற்று முடிந்தது. இதில், பெரும்பான்மையான இடங்களை ட்ரம்ப் சார்ந்த குடியரசு கட்சி கைப்பற்றியது. ட்ரம்ப் வருகின்ற 20ம் திகதி அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்க உள்ள நிலையில் அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு, உறுப்பினர்கள் பதவி பிரமாணம் எடுத்து கொள்ளும் நிகழ்வு நடைபெற்று வருகிறது. இதில் கிழக்கு கடற்கரையில் இருந்து சென்று பகவத் கீதை மீது சத்தியப் பிரமாணம் எடுத்த முதல் இந்திய – அமெரிக்க பிரதிநிதி என்ற பெருமையை சுஹாஷ் சுப்ரமணியம் பெற்றுள்ளார். பதவிப்பிரமாண நிகழ்விற்கு அவருடைய தாயாரும் நேரில் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. "அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு வேர்ஜினியாவில் இருந்து உறுப்பினராக பதவி பிரமாணம் எடுத்து கொண்ட முதல் இந்திய – அமெரிக்க பிரதிநிதி மற்றும் தெற்காசிய உறுப்பினராக பதவியேற்றமைக்காக என்னுடைய தாயார் பெருமையடைகிறார். உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட தகவலை முதலில் தெரிவிக்கும்போது, நம்ப முடியாதவராக அவர் காணப்பட்டார். இது நிச்சயம் கடைசி அல்ல. இதற்காக நான் அதிக பெருமை கொள்கிறேன்" என தெரிவித்தார்.




# நியூசிலாந்து இமாலய வெற்றி



## தொடரை இழந்தது இலங்கை



இலங்கை- நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2-வது ஒரு நாள் போட்டியில் 113 ஓட்டவித்தியாசத்தில் நியூசிலாந்து இமாலய வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியுள்ளது.

நியூசிலாந்து அணி 09 விக்கெட்டுகளை இழந்து 255 ஓட்டங்களை எடுத்தது.வெற்றி இலக்கான 256 ஐ துரத்திச் சென்ற இலங்கை அணி (30.2) ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 142 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்தது. நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடிவருகிறது.

இரண்டாவது போட்டி நியூசிலாந்தின் செடான் பார்க் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணய சூழற்சிக்கு முன்னர் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்ததால், போட்டி தாமதமாக ஆரம்பிக்கப்பட்டது. மேலும் 50 ஓவர் போட்டி டக்வொர்த் லீவிஸ் முறைப்படி, 37 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. நாணய சூழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பபெடுத்தாடிய நியூசிலாந்து அணியில் தொடக்க ஆட்டக்காரர்கள் வில் யங் 16 ஓட்டங்களில் ஆட்டமிழக்க ரச்சின் ரவீந்திரா – மார்க் சாப்மேன் இருவரும் சிறந்த இணைப்பாட்டத்தை அமைத்து அணியின் ஓட்டங்களை விரைவாக உயர்த்தினர்.

சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட ரச்சின் ரவீந்திரா (79) ஆட்டமிழக்க மார்க்கும் (62) வெளியேறினார். விக்கெட் கீப்பர் லேதம் (1), பிலிப்ஸ் (22) பெவிலியன் திரும்பினர்.

கடைசியில் கப்டன் மிட்சல் சாண்ட்னர் (20 மற்றும் டேரில் மிட்சல் (38) இருவரும் இணைந்து அதிரடியாக விளையாடி ஆட்டமிழந்தனர். இலங்கை அணியில் தீக்ஷன 4 விக்கெட்டுகளும், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணியில் பத்தும் நிசங்க, அவிஷ்க பெர்னாண்டோ மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் ஆரம்பத்திலே வெளியேறினர்.

கமிந்து மெண்டிஸின் நம்பிக்கை கொடுத்தார். ஆனால் விக்கெட்டுகள் சீரான இடைவெளியில் விழுந்ததால் 142 ஓட்டங்களுக்கு இலங்கை சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

நியூசிலாந்து அணியில் ஓரூர்க் மூன்று விக்கெட்டுகளை எடுத்தார், ஹென்றி இறுக்கமாகப் பந்துவீசி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார், டஃபி இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார், ஸ்மித் மற்றும் சான்ட்னர் தலா ஒரு விக்கெட்டை எடுத்தனர்

# பளு தூக்கும் போட்டியில் தங்கம் வென்ற மூதாட்டி



தேசிய அளவிலான பளு தூக்கும் போட்டியில் 50 கிலோ எடைப்பிரிவில் கோவையைச் சேர்ந்த 82 வயது கிட்டம்மாள் என்ற மூதாட்டி, தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். தனது பேரன்கள் உடற்பயிற்சி செய்வதைக் கண்டு கிட்டம்மாள், வார இறுதி நாட்களில் உடற்பயிற்சி கூடத்திற்குச் சென்றுள்ளார். இதன் விளைவாக டெல்லியில் “நேச்சுரல் ஸ்ராங் பவர்லிப்டிங் பெடரேசன்” (Natural strong powerlifting federation) சார்பில் நடந்த பளு தூக்கும் போட்டியில் பங்கேற்று முதலிடத்தைப் பிடித்துள்ளார்.





இலங்கை பாடசாலை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் நடாத்தப்பட்ட 13 வயது பிரிவு கடின பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் இரத்தினபுரியில் நடைபெற்றது. இரத்தினபுரி தமிழ் தேசிய பாடசாலை –இரத்தினபுரி ரோயல் கல்லூரி அணிகளுக்கிடையில் இரத்தினபுரி சீவலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இரத்தினபுரி தமிழ் தேசிய பாடசாலை அணி 39.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.எதிர்த்தாடிய ரோயல் கல்லூரி அணி 34 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை போட்டி நேரம் முடிவடைந்ததால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. (படங்கள் : இரத்தினபுரி நிருபர்)

### சம்பியன்ஸ் கிண்ணம்

# பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் பும்ரா விளையாடுவது சந்தேகம்




சம்பியன்ஸ் கிண்ண தொடரில் இந்திய அணியில் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான பும்ரா சிட்னியில் நடைபெற்ற ஐந்தாவது டெஸ்டில் காயம் காரணமாக இடையில் விலகினார்.

இதனால் பும்ராவுக்கு 8 வாரம் ஓய்வு எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் தொடரில் பும்ராவுக்கு ஓய்வு அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அது மட்டுமல்ல சம்பியன்ஸ் கிண்ணத்தில் பும்ரா சேர்க்கப்பட்டாலும் அவர் லீக் சுற்றில் விளையாட மாட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய அணி வரும் பெப்ரவரி 20ஆம் திகதி பங்களாதேஷ்க்கு எதிரான லீக் ஆட்டத்திலும், பெப்ரவரி 23ஆம் திகதி பாகிஸ்தானுக்கு எதிரான லீக் ஆட்டத்திலும், மார்ச் இரண்டாம் திகதி நியூசிலாந்துக்கு எதிரான லீக் ஆட்டத்திலும் விளையாட உள்ளது.

# கோ கோ உலகக் கிண்ணம் ஜனவரி 13-ஆம் திகதி ஆரம்பம்




கோ கோ விளையாட்டின் அறிமுக உலகக் கிண்ண போட்டி, டில்லியில் 13 – 19-ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்திரா காந்தி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில், ஆடவார் பிரிவில் 20 அணிகளும், மகளிர் பிரிவில் 19 அணிகளும் களம் இறங்குகின்றன.

தற்போது வெளியாகியிருக்கும் போட்டிக்கான அட்டவணையின்படி, ஆடவார் பிரிவில் குரூப்புக்கு 5 அணிகள் வீதம் 4 குரூப்களாக பிரிக்கப்பட்டுள்ளன. மகளிர் அணியிலும் 4 குரூப்கள் அடக்கம்.

இந்திய அணி, ஆடவார் பிரிவில் முதல் போட்டியில் நேபாளத்தையும் (ஜன.13), மகளிர் பிரிவில் முதல் போட்டியில் தென் கொரியாவையும் (ஜன. 14) சந்திக்கிறது. இப்போட்டியின் லீக் சுற்று போட்டிகள் ஜனவரி 16-ஆம் திகதி நிறைவடைந்து, பிளே ஆஃப் சுற்று 17-ஆம் திகதி ஆரம்பமாகிறது. இறுதி ஆட்டம் 19-ஆம் திகதி நடைபெறவுள்ளது.

குரூப் சுற்று நிறைவில் ஒவ்வொரு குரூப்பிலும் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகளும், 3-ஆம் இடத்தைப் பிடிக்கும் இரு சிறந்த அணிகளும் காலிறுதிக்கு முன்னேறுகின்றன.

கோ கோ (Kho kho) ஓர் இந்திய விளையாட்டாகும். களத்தில் உள்ள 9 பேர்களையும் தொட்டு புறம் போக்குவதே எதிரணி ஆட்டக்காரரின் நோக்கமாகும். எதிரணி ஆட்டக்காரர் தொட்டு விடாமல் தப்பித்து ஓடுவது ஆட்டக்காரரின் நோக்கமாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் விளையாடப்படும் இரண்டு பாரம்பரிய விளையாட்டுகளில் கோகோ-வும் ஒன்றாகும். மற்றையது கபடி ஆகும். இந்தியத் துணைக்கண்டத்தைத் தவிர தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்திய சமூகத்தவராலும் இவ்விளையாட்டு விளையாடப்படுகிறது. சடுகுடு விளையாட்டைப் போன்றது எனினும் இது அதனிலும் வேறுபட்டது.

**குரூப் விவரம்:**

**ஆடவர் அணிகள்**

குரூப் ‘ஏ’: இந்தியா, நேபாளம், பெரு, பிரேஸில், பூட்டான்.

குரூப் ‘பி’: தென்னாப்பிரிக்கா, கானா, ஆர்ஜென்டீனா, நெதர்லாந்து, ஈரான்.

குரூப் ‘சி’: பங்களாதேஷ், இலங்கை, தென் கொரியா, அமெரிக்கா, போலந்து.

குரூப் ‘டி’: இங்கிலாந்து, ஜேர்மனி, மலேசியா, அவுஸ்திரேலியா, கென்யா.

**மகளிர் அணிகள்**

குரூப் ‘ஏ’: இந்தியா, ஈரான், மலேசியா, தென் கொரியா.

குரூப் ‘பி’: இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கென்யா, உகண்டா, நெதர்லாந்து.

குரூப் ‘சி’: நேபாளம், பூட்டான், இலங்கை, ஜேர்மனி, பங்களாதேஷ்.

குரூப் ‘டி’: தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, போலந்து, பெரு, இந்தோனேசியா.

# தலைவர் கிண்ண இளையோர் உதைப்பந்தாட்ட போட்டித் தொடர்



மென்செஸ்டர் உதைப்பந்தாட்ட அக்கடமி- இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தலைவர் கிண்ண இளையோர் உதைப்பந்தாட்ட போட்டிகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகி ஜனவரி 23ஆம் திகதி வரை கொழும்பு ரேஸ்கோர்ஸ் மற்றும் பெத்தகான உதைப்பந்தாட்ட மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிகள் தொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

தலைவர் கிண்ண இளையோர் உதைப்பந்தாட்ட தொடர் மென்செஸ்டர், கொழும்பு, சோண்டர்ஸ், ஜவாலேன், பார்சிலோனா மற்றும் கொழும்பு யூத், உதைப்பந்தாட்ட அக்கடமி ஆகியவற்றுக்கிடையில் போட்டிகள் நடைபெறவுள்ளன. கிண்ணத்தை வெற்றி கொள்ளும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபாவும், இரண்டாம் அணிக்கு 50,000 ரூபாவும் பரிசாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மென்செஸ்டர் உதைப்பந்தாட்ட அக்கடமியானது இலங்கையிலுள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு உதைப்பந்தாட்ட பயிற்சிகளை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. அதிநவீன வசதிகள் மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களை கொண்டு திறன்களை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

உதைப்பந்தாட்ட இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

“இலங்கையில் உதைப்பந்தாட்டம் ஸ்திரமான நிலையை நோக்கிச் செல்லும் சந்தர்ப்பத்தில் இளைஞர்களுக்கான காற்பந்து போட்டியை ஏற்பாடு செய்த மென்செஸ்டர் அக்கடமிக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறேன். இது ஆரம்பம்தான். இந்த ஆண்டு, இளம் உதைப்பந்தாட்ட வீரர்களுக்காகப் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்” என்று தலைவர் உமர் கூறினார்.

மென்செஸ்டர் எக்காடமியின் தலைவர் அகஸ்டின் ஜோர்ஜ் கூறுகையில், உதைப்பந்தாட்ட வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட தனது நிறுவனம் குறுகிய காலத்தில் முன்னேற்றமடைந்துள்ளது என்றார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 09ம் திகதி வியாழக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.